JULY 18, 2020
SATURDAY
E-PAPER

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror



# ‘கொரோனாவை வீட்டுக்கு கொண்டுவர வேண்டாம்’

“வீட்டுக்கு கொரோனாவை கொண்டுவர வேண்டாம்” என புதிய தூர நோக்கொன்றை சுகாதாரப் பிரிவு நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது” என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.

“வீட்டிலிருந்து வெளியேறும் நபர், பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவது, வர்த்தக நிலையங்களுக்குச் செல்லல், உறவினர்களின் வீடுகளுக்குச் செல்ல, உற்சவங்களில் பங்கேற்றல் ஆகியன, வீட்டிலிருக்கும் பிள்ளைகள் மற்றும் வயதானோர் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கும் ஆகையால், கொரோனாவை வீட்டுக்குக் கொண்டுவர வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது” என வைத்தியர் ஹரித்த அலுத்கே தெரிவித்தார். “வீட்டிலிருந்து வெளியேறி, வீட்டுக்கு மீண்டும் திரும்பும்போது, சுகாதார முறைமைகளைப் பின்பற்றுவது கட்டாயமானதாகும்” என்றார்.

தொடர்ச்சி P2

தேர்தலின் போதான சுகாதார ஒழுங்குவிதிகள்;

## கடும் நிபந்தனைகளுடன் வர்த்தமானி வெளிவந்தது

முழுச் செய்தி P2

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னரே

# ‘சஹ்ரான் குழு தொடர்பில் மைத்திரியிடம் கூறினேன்’



- 2015 – 2016 வரை, மூன்று முறை தகவல்கள் கிடைத்தன
- வெளிநாட்டு புலனாய்வு பிரிவின் ஒத்துழைப்பை கோரியிருந்தேன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர், சஹ்ரான் ஹாசீம் உள்ளிட்ட அவருடைய சகாக்கள், குழுவினர் தொடர்பில், அன்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்கு பாதுகாப்புப் பேரவை கூட்டப்படும் சந்தர்ப்பத்தில் கொண்டுவந்தேன் என முன்னாள் பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்ககோன், சாட்சியமளித்தார்.

தொடர்ச்சி P2

மிருசுவில் படுகொலை விவகாரம்;

# ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கு எதிரான வழக்குகள் ஒத்திவைப்பு

மிருசுவில் படுகொலைகள் தொடர்பிலான வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்னாயக்கவுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு வழக்குகளும், உயர்நீதிமன்றத்தில் நேற்று (17) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

வழக்குகளின் பிரதிவாதிக்கு, ஒரேயொரு வழக்குத் தொடர்பிலான நோட்டீஸ் மட்டுமே கிடைத்துள்ளது. ஆகையால், மேலும் மூன்று வழக்குகளுக்கான நோட்டீஸ்களையும் அனுப்பிவைத்து, மேற்படி வழக்கை, செப்டெம்பர் 24ஆம் திகதி ஒரே தடவையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் நேற்று(17) தீர்மானித்தது.

இந்த வழக்கு, நீதியரசர் எல்.எச் தெஹிதெனிய, யசந்த கோதாகொட ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மூன்று வழக்குகளின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார். மற்றைய வழக்கில், ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் ஆஜராகியிருந்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில், பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நெரின்புள்ளே ஆஜராகியிருந்தார்.

இந்த நான்கு வழக்குகளில், இரண்டு வழக்குகள் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டன. ஏனைய இரண்டு வழக்குகளும் பொதுநலம் கருதித் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

படுகொலை செய்யப்பட்ட தனது தந்தை மற்றும் இரண்டு சகோதரர்கள் சார்பில், அவருடைய உறவினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

தொடர்ச்சி P2



# ஒரு மாதிரி...

ஒகஸ்ட் 5ஆம் திகதியன்று வாக்குச் சாவடிகளுக்கு, ஆகக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பை வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்காக, பொலித்தீனுடன் கூடிய நிலையான வெளிப்படையான திரை தயாரிக்கப்பட்டுள்ளது. அதனைத் தயாரித்த நிறுவனத்தின் பிரதிநிதியொருவர், அதன் மாதிரியை, தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்று (17) கொண்டுவந்தார். (படம்: நிமல்சிறி எதிரிசிங்ஹ)



# புவனெகபாஹு மன்னனின் சட்டசபை இடித்தழிப்பு

## விசாணைக்கு பிரதமர் குழு நியமனம்

13ஆம் நூற்றாண்டில், குருநாகல் இராசதானிக்கு சொந்தமான, புவனெகபாஹு ஹோட்டல் என்றழைக்கப்படும், இரண்டாம் புவனெகபாஹு மன்னனின் சட்டசபை மண்டபம், இடித்தழிப்பு செய்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, குழுவொன்றை நியமித்துள்ளார்.

தொல்பொருள் கட்டடத்தை இழித்தழிப்பு செய்தமை தொடர்பில் ஆராயும் நிபுணர் குழுவின் அறிக்கையை, ஜூலை 23ஆம் திகதிக்கு முன்னர், சமர்ப்பிக்குமாறும் பிரதமர், நேற்று(17) பணித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு (23-07-2020) முன்னர் இந்தப் குழுவினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. புத்தசாசன, கலாசார அமைச்சர் என்ற வகையிலேயே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில், அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திரவினால் நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசாநாயக்க தலைமையில் நியமிக்கப்பட்ட அந்த நிபுணர் குழுவில், குருநாகல் மாவட்ட செயலாளர் ஆர்ல எம். ரத்நாயக்க, தொல்பொருள் ஆய்வாளர், பேராசிரியர் டி.பி. குலதுங்க, கலாசார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் பிரசாத் ரணசிங்க,

தொடர்ச்சி P2

# பாடசாலைகளுக்கு ஒகஸ்ட் 5வரை பூட்டு




ஒகஸ்ட் 5ஆம் திகதி வரையிலும் அதாவது, பொதுத் தேர்தல் நிறைவடையும் வரையிலும், சகல பாடசாலைகளையும் மூடிவைத்திருக்குமாறு சுகாதார அதிகாரிகளால், பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்தப் பரிந்துரைகள், சுகாதார அமைச்சினால், கல்வியமைச்சுக்கு அனுப்பிவைக்க ப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது.

அவற்றை ஆராய்ந்ததன் பின்னர், பாடசாலைகளை மீளவும் திறப்பது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பொன்றை கல்வியமைச்சு விரைவில், விடுக்குமென அந்தத் தகவல் தெரிவித்தது.

எவ்வாறெனினும், தேர்தல் கடமைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலைகள், அந்தக் காலப்பகுதியில் திறக்கப்பட்டு, தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமென, தேர்தல் ஆணைக்குழுவுக்கு கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

# தீவிரவாத, சித்தாந்தங்களிலிருந்து மீட்பதற்கான விதிமுறைகள்

தீவிரவாத, சித்தாந்தங்களிலிருந்து மீட்டெடுப்பதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்படுமென, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

தற்போது தயாரிக்கப்பட்ட புனர்வாழ்வளிப்பு ஒழுங்குவிதிகள் அடங்கிய ஒருவரை, சட்ட மா அதிபர் தப்புல டி லிவேராவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவை திருத்தப்பட்டு, நிறைவேற்றப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.



மத தீவிரவாத சித்தாந்தங்களுடன் கூடிய சந்தேகநபர்களை அந்த சிந்தனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக, இந்த ஒழுங்குவிதிகள் அடங்கிய வரைவு முன்வைக்கப்பட்டுள்ளதென சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி, ஜனாதிபதி நிஷாந்த ஜயரத்ன தெரிவித்தார்.

கொரோனாவை கட்டுப்படுத்தும் செயற்பாட்டிலிருந்து

# முழுமையாய் விலகியது PHI

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக, முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுகளிலிருந்தும் நேற்றுப்பிற்பகல் 12.30 மணியுடன், பொதுமக்கள் பரிசோதகர்கள் சங்கம் விலகிக்கொண்டுவிட்டதெனத் தெரிவித்த அச்சங்கத்தின் தலைவர் எம்.ஜீ.யூ. ரோஹண, கொரோனா வைரஸ், நாடுமுழுதும் வியாபிக்கும் அபாயம் தென்படுகின்றது என்றார்.

தங்களுடைய முடிவு தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், சட்டத்தின் பாதுகாப்பு இன்றி, தொடர்ச்சியாக அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமுடியாது என்றார்.

“கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக, சட்டரீதியிலான வசதிகள் இன்றி, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தொற்றைத் தடுப்பதற்கான சட்டத்தின் கீழ், பொது சுகாதார அதிகாரிகளுக்கு அதிகாரத்தை வழங்காமல், அரசியல் கூட்டங்களை தன்னிச்சையாக நடத்துதல், சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய தேர்தல் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடாமை ஆகிய காரணங்களை முன்வைத்தே, தாங்கள் விலகிக்கொண்டதாக அச்சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்துள்ளார்.

“பொது சுகாதார அதிகாரிகளுக்கு அதிகாரத்தை வழங்கினால் அது பொதுமக்களுக்கு அழுத்தத்தை கொடுக்குமென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளமையைக் கண்டித்தும், மேற்படி தீர்மானத்தை எடுத்ததாக, செயலாளர் எம்.பாலசூரிய மேலும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை, சட்ட அதிகாரமின்றி அடிமட்டத்திலிருந்து கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாது. அதற்கான வசதிகளும் இல்லையெனத் தெரிவித்த அவர், இதனால், கொரோனா வைரஸ் முழு நாட்டுக்குள்ளும் பரவும் நிலைமையொன்றே ஏற்பட்டுள்ளது என்றார்.

நிலைமை அவ்வாறிருக்கையில், சுகாதார ஆலோசனைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக, சட்டத்தைச் செயற்படுத்த முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதெனத் தெரிவித்த அவர், அரசியல் கூட்டங்களும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் தன்னிச்சையாக நடத்தப்படுகின்றன. இதனால், கொரோனா வைரஸ், இன்னுமின்னும் வியாபிப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என்றார்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியின் கூற்றாது. தங்களுடைய கடமைகளை அவமதிக்கும் செயலாகுமெனத் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கு

### எதிரான வழக்குகள் ஒத்திவைப்பு

மேலும் ஐந்து உறவினர்கள் இணைந்து மற்றுமொரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். பொதுநல வழக்குகளில் ஒன்று, மாற்றுக்கொள்கைக்கான நிறுவனம் தாக்கல் செய்துள்ளது. நான்காவது வழக்கை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியலில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள செல்வி அம்பிகா சற்குணநாதன் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மூன்று வழக்குகளின் சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார். எனினும், செல்வி அம்பிகா சற்குணநாதன் தாக்கல் செய்துள்ள வழக்கில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ,சுமந்திரனின் சிரேஷ்ட சட்டத்தரணி கணகேஸ்வரன், எதிர்காலத்தில் ஆஜராவாரென நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்குகள் நேற்று (17) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுக்களில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சுனில் ரத்நாயக்கவுக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ். ஒரேயொரு வழக்குக்கானதாகும் என, நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதுடன், அவரது சார்பில் சட்டத்தரணி கனிக்ஷ வித்தாரண ஆஜராகவுள்ளாரென அறிவிக்கப்பட்டது.

மற்றைய வழக்குகள் தொடர்பிலான தகவல்கள் பிரதிவாதிக்குக் கிடைக்கவில்லை. நீதியமைச்சின் செயலாளர் மாறியிருக்கும் காரணத்தால், பிரதிவாதியின் சார்பில், நீதியமைச்சின் புதிய செயலாளரை மாற்றீடு செய்வதற்காகவும் காலஅவகாசம் வழங்கப்பட்டு, இந்த நான்கு வழக்குகளும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்வதற்காக, செப்டெம்பர் 24ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மிருசுவிலில், 2000ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 20ஆம் திகதியன்று சிறுவர்கள் உட்பட எட்டுபேர் படுகொலை செய்யப்பட்டனர். அவகளுடைய சடலங்கள், மலசலக்குழிக்குள்ளிருந்து பின்னர் கைப்பற்றப்பட்டன.

எட்டு தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இராணுவத்தைச் சேர்ந்த சுனில் ரத்னநாயக்கவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 2015 ஜூன் 25ஆம் திகதின்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்து. இந்த வழக்கில், குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஏனைய நான்கு இராணுவத்தினருக்கு எதிராக, போதிய ஆதாரமின்மையால் அந்தநால்வரையும் நீதிமன்றம் விடுதலை செய்தது.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், 2020 மார்ச் 20ஆம் திகதியன்று இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்னாயக்கவை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சஹ்ரான் குழு தொடர்பில் மைத்திரியிடம் கூறினேன்'

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குல் தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில், நேற்று (17) அவர் சாட்சியமளித்தார்.

முஸ்லிம் பிரிவினைவாதம் தொடர்பில் ஆராய்வதற்கான பிரதி பொலிஸ்மா அதிபரின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் கண்டறியப்பட்ட புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய, முன்னாள் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தப்பட்டதென தனது சாட்சியத்தில் என்.கே.இளங்கோன் தெரிவித்துள்ளார்.

"ஐ.எஸ் பயங்கரவாதிகளின் செயற்பாடுகளுக்கு அமைய, சஹ்ரான் ஹாசீம் செயற்பட்ட விதங்கள் தொடர்பில், பிரதி பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான அந்தக் குழுவின் ஊடாக 2015ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள், புலனாய்வுத் துறை தகவல்கள், மூன்று தடவைகள் எனக்குக் கிடைத்தன" என்றும் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர் தொடர்பில் தேடியறிவதற்கு வெளிநாட்டு புலனாய்வு பிரிவின் ஒத்துழைப்பை கோரியிருந்தேன் என்றும் தனது சாட்சியத்தில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் என். கே. இளங்கோன் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியசர் ஜனக் டி சில்வாவின் தலைமையில், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள், இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வாழ்த்துகள்...

இலங்கைக் கடற்படையின் 24ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.
தனது கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர், கடற்படைத் தளபதி, உத்தியோகப்பூர்வமாக நேற்று (17) முற்பகல், அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.



# புவனேகபாஹு மன்னனின் சட்டசபை இடித்தழிப்பு

கலாசார நிதியத்தின் பணிப்பாளரும் வாஸ்துவியல் நிபுணருமான சுமேதா மாதொட்ட ஆகியோரும் அடங்குகின்றனர்.

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழே, குருநாகல் நகர சபையின் தலைவரின் (ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன) பணிப்புரையின் பேரிலேயே இந்தக் கட்டடம் இடித்தழிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 'கொரோனாவை வீட்டுக்கு கொண்டுவர வேண்டாம்'

பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, ஹோமாகம பொலிஸ் அதிகாரி காரியாலயத்தில் கடமையிலிருந்த சகல அதிகாரிகளும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஹோமாகம சுகாதார வைத்திய அதிகாரி ஜகத் குமாரவின் அறிவுறுத்தலுக்கு அமைய, பொலிஸ் அதிகாரிகள் 14 பேர் உட்பட, 73 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அநுராதபுரம்- இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 12 வயதான ஒருவருக்கும் இந்தியாவிலிருந்து வந்து ஒருவருக்கும் கொரோனா தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில், கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2,697ஆக அதிகரித்துள்ளதென அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரையிலும் பூரணமாக குணமடைந்து 2,012 பேர் தங்களுடைய வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 665 பேர், வைத்தியசாலைகளில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில், மேலும் ஐவர், பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முழுமையாய் விலகியது PHI

கடமைகளைச் செய்வோருக்கு இடமளித்துவிட்டு, அதிலிருந்து தாங்கள் விலகிக்கொண்டதாகத் தெரிவித்த அவர், நாடளாவிய ரீதியிலுள்ள சகல பொது சுகாதார அதிகாரிகளும், தங்களுடைய கடமைகளிலிருந்து விலகிக்கொண்டனர் என்றார்.

# கைது முயற்சியை நிறுத்தகோரி ரிஷாட் பதியூதீன் மனுத்தாக்கல்

தன்னைக் கைது செய்வதற்கான முயற்சிகளை நிறுத்துமாறு கோரி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாட் பதியூதீன், அடிப்படை உரிமை மனுவொன்றை, உயர் நீதிமன்றத்தில், நேற்று (16) தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதிச் சட்டத்தரணிகளான பாயிஸ் முஸ்தபா, அனுஜ பிரேமரத்ன ஆகியோரூடாக, இந்த அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடிக்கடி மேற்கொள்ளப்படும் விசாரணைகள், கைதுக்கான முயற்சிகளால், தேர்தலுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல்கள் ஏற்படுவதாகவும், அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> நாடளாவிய ரீதியில் எமது கட்சிக்குக் கிடைக்கவிருக்கும் ஆசனங்களை குறைப்பதற்காகவுமே, இவ்வாறான திட்டமிட்ட சூழ்ச்சி நடைபெறுவதாக நான் கருதுகிறேன்

எஅங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவரென்ற வகையில், இன்றைய தேர்தல் சூழலில், பல வேலைப்பாடுகள் உள்ளன. அடிக்கடி என்னைக் கைது செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவது, எனது தேர்தல் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது. மேலும், தேர்தலுக்கு இன்னும் சில நாள்களே எஞ்சியுள்ளதால், பல கூட்டங்களிலும் பங்கேற்க வேண்டியுள்ளது" எனவும், அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இதற்கு முன்னரும், அடிக்கடி என்னை விசாரணைக்கு


> கடைசியாக 10 மணி நேரம் நான் விசாரிக்கப்பட்டேன். இவ்வாறான செயற்பாடுகளால், எனது பெயருக்கும் களங்கம் ஏற்படுத்த முயற்சி

அழைத்தனர். கடைசியாக 10 மணி நேரம் நான் விசாரிக்கப்பட்டேன். இவ்வாறான செயற்பாடுகளால், எனது பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தப்படுவதாகவே நான் உணர்கிறேன். தேர்தலில் என்னைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காகவும், நாடளாவிய ரீதியில் எமது கட்சிக்குக் கிடைக்கவிருக்கும் ஆசனங்களை குறைப்பதற்காகவுமே, இவ்வாறான திட்டமிட்ட சூழ்ச்சி நடைபெறுவதாக நான் கருதுகிறேன். எனவே, இந்தக் கைது முயற்சிகளைத் தடுத்து நிறுத்த, உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்" என அந்த மனுவின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

# கடும் நிபந்தனைகளுடன் வர்த்தமானி வெளிவந்தது

ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய சுகாதார ஒழுங்குவிதிகள் அடங்கிய அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல், நேற்று (17) இரவு வெளியிடப்பட்டது.

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 2ஆம், 3ஆம் பிரிவுகளின் கீழ், சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சால் ஆக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல்களின்படி, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியினால், இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்

- அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் பின்வருமாறு,
- தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றை நடத்துவதற்கு 24 மணிநேரத்துக்கு முன்னர், அக்கூட்டம் தொடர்பான விவரங்களை, பிரதேச சுகாதார மருத்துவத்துறை அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.
- குறித்த கூட்டமொன்றுக்கு வருகைதருவோரின் எண்ணிக்கை, முந்நூறை விஞ்சுதலாகாது.
- கட்சியின் தலைவர் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவர் கலந்துகொள்ளும் கூட்டத்தில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை, ஐந்நூறை விஞ்சுதலாகாது.
- கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரினதும் பெயர், விவரங்கள் சேகரிக்கப்படல் வேண்டும்.
- கூட்டத்துக்குப் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும், கைகளைக் கழுவ வேண்டும். அதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியைப் பேணவேண்டும்.
- முகக்கவசத்தைக் கட்டாயம் அணிந்திருக்க வேண்டும்.
- ஒலிபரப்புச் சாதனங்கள் அனைத்தும், கிருமிநீக்கம் செய்யப்பட வேண்டும்.
- வீடு வீடாகச் செல்லும் பிரசாரப் பணியாளர்களின் எண்ணிக்கை, ஐவரை விஞ்சுதலாகாது.
- துண்டுப்பிரசுரம் விநியோகிக்க முன்னர், கைகளைக் கிருமிநீக்கம் செய்யவேண்டும்.
- வேட்பாளரின் அலுவலகம் அல்லது அதன் வளவுக்குள், மதுபானம் கொண்செல்லாதிருத்தல் மற்றும் அருந்தாதிருந்தல்.
- குறித்த அலுவலகம் அல்லது அதன் வளவுக்குள், விளையாட்டுகள் எவற்றையும் விளையாடிருத்தல் வேண்டும் என, அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவார காலத்துக்குள் தொழிற்சாலை உற்பத்திகளை ஆரம்பிக்குமாறு

# தேயிலைச் சபைக்கு பிரதமர் பணிப்புரை

மத்திய மாகாணத்தில் உற்பத்தியை நிறுத்தியுள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்பில், உரிய சோதனைகளை முன்னெடுத்து, ஒருவார காலத்துக்குள் அந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தேயிலைச் சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

13 தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்திகளை நிறுத்துவதற்கு, தேயிலைச் சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மத்திய மாகாணத் தேயிலை உற்பத்தியாளர்களுக்கும் இடையில், அலரி மாளிகையில், நேற்று (17) நடைபெற்ற சந்திப்பின்போதே, அவர் இந்தப் பணிப்புரையை, தேயிலைச் சபைக்கு விடுத்துள்ளார்.



இதன்போது கருத்துரைத்த மத்திய மாகாண தேயிலை உற்பத்தியாளர்கள், உரிய சோதனையின்றி மத்திய மாகாணத்தில், 13 தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தியை நிறுத்துவதற்கு தேயிலைச் சபை நடவடிக்கை எடுத்துள்ளமையால், சுமார் ஒரு இலட்சம் பேர் வரையிலானோர் இதுவரையில் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனத் தெரிவித்தனர். இக்காரணத்தால் உரிய சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து, அந்தத் தொழிற்சாலைகளின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, மத்திய மாகாண தேயிலை உற்பத்தியாளர்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த தேயிலைத் தொழிற்சாலைகள் தொடர்பில், தனித்தனியாக சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து கூடிய விரைவில் தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரால் தேயிலை சங்கத்தின் தலைவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. சட்டவிரோதமான முறையில் தேயிலை உற்பத்திகள் தொழிற்சாலைகளுக்குள் இடம்பெறுமாயின் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

உத்தேச மேற்குக்கரை இணைப்புத் திட்டம்;

## இஸ்ரேலிடம் இலங்கை முக்கியக் கோரிக்கை

உத்தேச மேற்குக்கரை இணைப்புத் திட்டத்தைக் கைவிடுமாறு, இலங்கை இஸ்ரேல் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பதில் நிரந்தர பிரதிநிதி தயானி மெண்டிஸ், ஐக்கிய நாடுகள் சபையின் 44ஆவது அமர்வில் உரையாற்றியபோதே, அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

பாலஸ்தீன மக்களின் நிலைமை குறித்து, ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் மைக்கேல் லிங்க், ஐக்கிய நாடுகள் அமர்வில் அறிக்கையொன்றை முன்வைத்தார்.

இந்த அறிக்கை தொடர்பாக ஆராய்ந்த இலங்கை, தனது நிலைப்பாட்டை பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர், மனித உரிமைகள் குழுவின் உயர்ஸ்தானிகர், இஸ்ரேலின் குறித்த திட்டம் தொடர்பாக விசாரிப்பதற்கான சிறப்பு குழுவினரால் எழுப்பப்பட்ட கவலைகள், இலங்கை அரசாங்கத்தால் பகிரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ இஸ்ரேல் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கை, குறித்த உத்தேச இணைப்பை கைவிடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது**

இவ்விடயம் தொடர்பில் கருத்துரைத்த இலங்கை, இஸ்ரேல் அரசாங்கத்தின் இணைப்புத்திட்டம், ஐக்கிய நாடுகளின் விதிமுறைகளை மீறும் செயல் எனவும் விமர்சனம் வெளியிட்டுள்ளது.

உத்தேச இணைப்புத்திட்டத்தால், மேற்கு கரை மற்றும் ஜோர்தான் பள்ளத்தாக்கு பகுதிகளில் வாழும் மனித உரிமைகளை பாதிக்கும் எனவும் குறித்த இனக்குழுவின் இடப்பெயர்வுக்கு வழிசெய்யும் எனவும் சிறப்பு அறிக்கையாளர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த கருத்துகளை இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், குறித்த விடயங்கள் தொடர்பாக சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடர, இஸ்ரேல் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ள இலங்கை, குறித்த உத்தேச இணைப்பை கைவிடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடற்படையினருக்கு

## ‘கொரோனா வைரஸ் பரப்பிய குற்றச்சாட்டை ஏற்கமாட்டேன்’

### சுதுவெல்ல நோயாளி தெரிவிப்பு

வெலிசறைக் கடற்படை முகாமிலுள்ள கடற்படை வீரர்களுக்கு, கொரோனாவை பரப்பிவிட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை, தான் ஏற்கப்போவதில்லை என்று, சுதுவெல்ல பகுதியில் அடையாளங் காணப்பட்ட 206ஆவது நோயாளர் தெரிவித்துள்ளார்.

ஜா - எல சுதுவெல்ல பகுதியைச் சேர்ந்த நபரொருவர், திருட்டுச் செயலுடன் தொடர்புபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில், ஏப்ரல் 25ஆம் திகதி, பிரதேச வாசிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அவர் வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்கு கொரோன தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டிருந்ததோடு, அவரை தனிமைப்படுத்தும் பணிகளை முன்னெடுத்த காரணத்தினாலேயே கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவியிருந்தாவும் கூறப்படுகிறது.

**“ மேற்படி நபரிடமிருந்து கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததன் விளைவாக, 3 கொரொனா தொற்றாளர்கள் அடங்கிய கொத்துகள் அடையாளம் காணப்பட்டதாக அறிவிப்பு**

அத்தோடு, மேற்படி நபரிடமிருந்து கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்ததன் விளைவாக, 3 கொரொனா தொற்றாளர்கள் அடங்கிய கொத்துகள் அடையாளம் காணப்பட்டனவெவும், அவற்றில் 1,100 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்றும் பாதுகாப்பு துறையினர் தெரிவிக்கின்றனர்.

மஞ்சள் தூளில் கலப்படம் பற்றி

## விசேட தேடுதல் வேட்டை

நுகர்வுக்குப் பயன்படுத்தப்படும் மஞ்சள் தூளில் கலப்படம் செய்யப்படுவதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, வியாபார நிலையங்களில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில வியாபார நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மஞ்சள் தூள், இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபையால் முன்னெடுக்கப்படும் அனைத்து சோதனைகளும் வழமைபோன்று இடம்பெற்று வருவதாகவும் மோசடிகளில் ஈடுபடும் வியாபாரிகள் தொடர்பில் தகவல் வழங்குவதற்காக, 1977 என்ற அவசர இலக்கத்தை, பொதுமக்கள் பயன்பாட்டுக்காக நுகர்வோர் அதிகார சபை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



இந்நிலையில் கொழும்பு-யோன் வீதியிலுள்ள வியாபார நிலையமொன்றிலிருந்து, சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான மஞ்சள் துண்டுகள் மற்றும் மஞ்சள் தூள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் இராசயான பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது.


மேற்படி வியாபார நிலையத்தில், அதிக விலைக்கு மஞ்சள் தூள் விற்பனைச் செய்யப்படுவதாக, மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் வழங்கியத் தகவலுக்கு அமையவே, இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

இணையவழித் தாக்குதலில்

## ‘இவ்வாரம் 130 கணக்குகள் இலக்கு’

இணையவழித் தாக்குதலில் இவ்வாரம் 130 கணக்குகள் இலக்கு வைக்கப்பட்டதாக, நேற்று முன்தினம் இரவு, டுவிட்டர் வெளிப்படுத்தியுள்ளது.

டுவிட்டரின் உள்ளக அமைப்புகளைக் கையாண்டு, டுவிட்டரின் பிரபலமானவர்களான ஐக்கிய அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன், தொலைக்காட்சி நட்சத்திரம் கிம் கார்டிஷியன், ஐக்கிய அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பரக் ஒபாமா, டெஸ்லா நிறுவுநர் எலோன் மஸ்க் உள்ளடங்கலானவர்களின் கணக்குகளில் ஊடுருவி, இலத்திரனியல் நாணயத்தைப் பெறுவதற்கு அவற்றைப் பயன்படுத்தியிருந்தனர்.



இலக்கு வைக்கப்பட்ட கணக்குகளிலிருந்த சிறிய விடயமொன்றின் கட்டுப்பாட்டை ஹக்கர்களால் பெற முடிந்ததாகவும் அதிலிருந்து அவர்கள் டுவீட்களை அனுப்பியதாகவும் டுவிட்டர் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலக்கு வைக்கப்பட்ட கணக்குகளின் தனிநபர் தரவை ஹக்கர்கள் கையாள முடிந்ததா என தாம் தொடர்ந்து ஆராய்ந்து வருவதாக, டுவிட்டர் மேலும் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்டவர்கள் தவிர பாடகர் கேன் வெஸ்ட், அமெஸொன் நிறுவுநர் ஜெஃப் பெஸோஸ், முதலீட்டாளர் வொரன் பபெட், மைக்ரோசொஃப்ட் இணை நிறுவுநர் பில் கேட்ஸின் கணக்குகள், ஊபர், அப்பிளின் கணக்குகளும் ஹக் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை

## ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது

இந்தியாவில் நேற்றுக் காலை எட்டு மணி வரையில், கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது என்று, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கமைவாக இந்தியாவில் நேற்றைய (17) தினம் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 34,956ஆல் அதிகரித்து 1,003,832 ஆக உயர்ந்தது.

உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 687ஆல் அதிகரித்து 25,602 ஆகக் காணப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் நாளொன்றுக்கான உயர்ந்த பட்ச அதிகரிப்பாக 77,000க்கும் அதிகமான புதிய கொவிட் 19 தொற்றுக்குள்ளானோர் நேற்று முன்தினம் பதிவாகிய நிலையில், இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 10.15 மணி வரையில் அங்கு 3,595,573 பேர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 138,288 பேர் கொவிட்-19-ஆல் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலில், நேற்று முன்தினம் வரையில் 2,012,151 பேர் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 76,688 பேர் கொவிட்-19ஆல் உயிரிழந்துள்ளனர்.

வாக்களிப்புச் செல்வதற்கான

## ‘விடுமுறை வழங்காவிடின் முறையிடவும்’

வாக்களிப்பதற்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து விடுமுறைப் பெற்றுக்கொள்வதில் ஏதேனும் சிக்கல் இருந்தால், முறைப்பாடு செய்யுமாறு, கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைப்பின் முறைப்பாட்டுப் பிரிவு முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் என்று அவ்வமைப்பினர் நிர்வாக இயக்குநர் மனாஸ் மகீன் தெரிவித்தார்.

**“ 0114341524 ஆகிய தொலைபேசி இலக்கத்துக்கும் 0112866224 தொலைநகல் இலக்கத்துக்கும் அல்லது info@caffesrilanka.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்**

முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அநேகமான தனியார் நிறுவனங்கள், ஒவ்வொரு தேர்தலிலும் தமது ஊழியர்களுக்கு வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்காது, வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையை மீறுவதாகத் தெரிவித்த அவர், இது நெருக்கடியான நிலை என்றும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையகத்தின் பரிந்துரைகளுக்கு அமைவாக, ஒவ்வொரு ஊழியர்களும் வசிக்கும் பகுதிக்கு ஏற்ப, வாக்களிப்புக்கான விடுமுறையை எடுப்பது ஊழியர்களின் உரிமை என்றும், அத்தகைய விடுப்பு வழங்க நிறுவனங்களின் தலைவர்கள் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வாக்களிப்புக்கான விடுமுறையை வழங்குவது, ஒவ்வொரு நிறுவனங்களின் கடமை என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, வாக்களிப்புக்கான விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியாத ஊழியர்கள், 0114341524 ஆகிய தொலைபேசி இலக்கத்துக்கும் 0112866224 ஆகிய தொலைநகல் இலக்கத்துக்கும் அல்லது info@caffesrilanka.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு, கபே அமைப்பின் நிர்வாக இயக்குநர் மனாஸ் மகீன் தெரிவித்தார்.

‘லா லிகா’ தொடரில்

## றியல் மட்ரிட் சம்பியன்




ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான ‘லா லிகா’ தொடரில் றியல் மட்ரிட் சம்பியனானது.

தமது பயிற்சி மைதானத்தில், நேற்று(17) அதிகாலை நடைபெற்ற வில்லாறியலுடனான போட்டியில் வென்றதன் மூலமே, இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே, லா லிகா சம்பியனாக றியல் மட்ரிட் முடிசூடிக் கொண்டது.

இப்போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில், றியல் மட்ரிட் வென்றிருந்தது. றியல் மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கரிம் பென்ஸீமா பெற்றிருந்தார். வில்லாறியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை வின்செண்டே இபோரா பெற்றிருந்தார்.

இந்நிலையில், ஐரோப்பியக் கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கை வெல்வதை விட லா லிகாவை வெல்வது மகிழ்ச்சியாகவுள்ளது என றியல் மட்ரிட்டின் முகாமையாளர் ஸினடி ஸிடன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஒஸஸுனாவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோல்வியடைந்தது. பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை லியனல் மெஸ்ஸி பெற்றிருந்ததோடு, ஒஸஸுனா சார்பாக ஜொஸே அர்னைஸ், றொபேர்ட்டோ டொரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இந்நிலையில், தமது வைரிகளான றியல் மட்ரிட்டிடம் லா லிகாவை பறிகொடுத்த நிலையில் பார்சிலோனாவில் விடயங்கள் மாற வேண்டும் என பார்சிலோனாவின் அணித்தலைவரான லியனல் மெஸ்ஸி தெரிவித்துள்ளார். இதேவேளை, போதுமான தீவிரம், ஆர்வத்துடன் தோற்கடிக்கப்படக்கூடிய நலிவான அணியொன்று தாம் என லியனல் மெஸ்ஸி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# விபத்தில் இளைஞன் பலி

■ எச்.எம்.எம்.பர்ஸான்

மட்டக்களப்பு- வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிச்சேனை ஜும்ஆ பள்ளிவாயலுக்கு அகருகில், நேற்று (16) காலை இடம்பெற்ற விபத்தில், இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் மீது, டிப்பர் ரக வாகனம் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில், மாவடிச்சேனை பாடசாலை வீதியைச் சேர்ந்த நாசர் நஜாத் (வயது 20) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, டிப்பர் வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாம்புத் தீண்டல்;

# பெண் தொழிலாளி வைத்தியசாலையில்

■ நிலமேகம் பிரசாந்த்

கொத்மலை- வெதமுல்லை தோட்டத்தில், பெண் தொழிலாளி ஒருவர், பாம்புத் தீண்டலுக்கு உள்ளான நிலையில், கொத்மலை ஆதார வைத்தியசாலையில், நேற்று (17) அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண், தேயிலைப் பறித்துக்கொண்டிருந்த போதே, பாம்புத் தீண்டலுக்கு உள்ளாகியுள்ளார். தேயிலைச் செடிகளுக்கு அடியிலிருந்த பாம்பு, மேற்படி பெண்ணை தீண்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், மேற்படி பெண் அம்பியுலன்ஸ் வண்டியூடாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

# கொலை செய்யும் திட்டத்துடன் பயணித்தவர் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் பல்வேறு கொள்ளை, திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர், ஒருவரை கொலை செய்யும் திட்டத்துடன் பயணித்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால், நேற்று (17) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டு தயாரிப்பிலான கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி நபருக்கு எதிராக, 35 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தார்.

# 'தங்க நகைகளை அணிந்துச் செல்லாதீர்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிக்கும் பெண்கள், தங்க நகைகளை அதிகளவில் அணிந்துச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு, யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி நிகால் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைய நாள்களில் வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில் இது தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# விபத்தில் நால்வர் காயம்

■ வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று - சாகாமம், கோளாவில் பிரதேசத்தில், நேற்று (17) நண்பகல் இடம்பெற்ற விபத்தில் நால்வர் காயமடைந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயம் அடைந்தவர்களில் மூன்று ஆண்கள் பெண்ணொருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். கோளாவில் பிரதேசத்தில் இருந்து அக்ககறைப்பற்றை நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள், முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்தி முற்பட்டபோது விபத்து சம்பவித்துள்ளது.

நாட்டுக்குள் மேலும்

# 'பிரிவினைவாதத்தை ஏற்படுத்த வேண்டாம்'

நாட்டில், சாதாரண மக்களுக்கு இல்லாத முன்னுரிமை, வியத்மக அமைப்பினருக்கு மாத்திரம் எவ்வாறு வழங்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி வி.ஜனகன், நாட்டுக்குள் மேலும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த வேண்டாம் என்றும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று (17) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், "கொவிட் 19 பாதிப்பு காரணமாக, வெளிநாடுகளில் இருந்து பயணிகள் விமானங்களும் சரக்கு விமானங்களும், இம்மாதம் 14ஆம் திகதி



தொடக்கம் இலங்கைக்கு வருவதற்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியதுடன், இந்நிலையில், வியத்மக குழுவினரை மாத்திரம், முழு முயற்சியுடன் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு முயற்சிப்பது, அரசியல் நோக்கமாகும் என்றும் சாடினார்.

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட்ட வியத்மக அமைப்பின் உறுப்பினர்கள், பாதுகாப்பாக நாடு திரும்புவதற்கு விசேட விமானம் ஒன்று தயார்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலண்டனில் இருக்கும் தங்களின் உறுப்பினர்கள் அல்லது வெளிநாடுகளில் இருக்கும் ஏனைய அங்கத்தவர்கள் நாடு திரும்ப வேண்டுமானால், உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு, வியத்மகவின் ஐக்கிய இராச்சிய கிளையின் தலைவர் வட்ஸ்அப் குழுவின் மூலம் தகவல் அனுப்பியிருக்கின்றார். "அதன்படி வியத்மக உறுப்பினர்களுக்கான விசேட விமானம் ஒன்றைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றும், அவர் தனது வட்ஸ்அப் தகவலில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் செல்லவுள்ள உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக, வியத்மக அமைப்பினரை நாட்டுக்கு அழைத்துவர முடியுமானால், மத்திய கிழக்கில் அநாதரவாக உள்ள இலங்கையர்களை அழைத்து வருவதற்கு அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

"இவ்விடயத்தில், நாட்டு மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும். நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு ஒரு நீதியும் ஜனாதிபதியின் ஆதரவுடன் இயங்கும் ஓர் அமைப்புக்கு இன்னொரு நீதியும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். நாட்டுக்கு அழைத்துவரப்படும் வியத்மக அமைப்பினர், 14, 21 நாள்களுக்குத் தனிமைப்படுத்தல் நடைமுறைக்கு உட்படுத்தப்படாமல் நேரடியாகவே சமூகத்தில் உலாவக் கூடிய நிலையும் இருக்கின்றது.

"நாட்டின் சாதாரண பிரஜைகளைவிட அவர்களுக்கு இந்தளவுக்கு அதிகபட்ச முன்னுரிமை வழங்கப்படுவதற்கான காரணம் என்னவென்று கேட்பதற்கு, சமூகத்தின்மீது அக்கறைக் கொண்டுள்ள நாங்கள் கடமை பட்டிருக்கின்றோம். எனவே, நாட்டு மக்கள் அனைவரையும் ஒரே நிலையில் இருந்து நோக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். அத்துடன், இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து, நாட்டுக்குள் மேலும் பிரிவினைகளை ஏற்படுத்த வேண்டாம் என்று அரசாங்கத்தை நான் வலியுறுத்துகின்றேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

# '1,000 ரூபாயை நான் ஒருபோதும் எதிர்க்கவில்லை'

■ டி.ஷங்கீதன்

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்குவதற்கு, நான் எந்த இடத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை" என்று, ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்டத் தலைமை வேட்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா காரியாலயத்தில், நேற்று (17) நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, தற்போது



750 ரூபாய் கிடைக்கின்றது. இத்தொகையுடன், இன்னும் 250 ரூபாய் சேர்த்துக் கொடுப்பதற்கு நான் எங்குமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை" என்றார்.

"நான், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக இருந்தப்படியால், 2016ஆம் ஆண்டு, தீபாவளி முற்கொடுப்பனவை வழங்குவதற்காக, தேயிலைச் சபை மூலம் 500 மில்லியன் ரூபாயைக் கடனாக பெற்றுக் கொடுத்தேன். அது மாத்திரமில்லாது, 50 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்கு, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக, மேலும் 600 மில்லியன் ரூபாயை ஒதுக்கினேன். இவ்வேளையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தில் ஆட்சி மாற்றதைக் கொண்டுவந்ததால், அந்தப் பணத்தை, தொழிலாளர்களுக்கு வழங்க முடியாமல் போய்விட்டது. இவ்விடயம் திகாம்பரத்துக்கும் நன்கு தெரியும். அரசியல் இலாபம் பெறுவதற்காக, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் திகாம்பரம் கூறிவருகின்றார். மலையக மக்கள், எனது மக்கள். அவர்கள் தமிழராக இருதாலும் சரி சிங்களவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எனது தொகுதி மக்கள். அவர்களுக்கு 250 ரூபாய் சம்பளம் அதிகரித்தால், நான் ஒரு பௌத்தன் என்ற ரீதியில் மகிழ்ச்சியடைவேன்" என்றார்.



கிளிநொச்சியில்

# தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு எதிராக நடவடிக்கை

■ க.அகரன்

வவுனியாவின் பல பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் விளம்பரங்கள், பிரசுரங்களுக்கு எதிராக, நேற்று (17) முதல் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியா - பண்டாரிகுளம் பாடசாலைக்கு முன்பாக ஒட்டப்பட்டிருந்த தேர்தல் பரப்புரை விளம்பரங்களைக் கிழித்து வருவதுடன், மதில்கள், மின்கம்பங்களில் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு கழிவு எண்ணெய் பூசும் நடவடிக்கையையும் பண்டாரிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். நகரின் பல்வேறு பகுதிகளில், அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் தேர்தல் பரப்புரைப் பிரசுரங்கள் விளம்பரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

அவ்வாறு ஒட்டப்பட்டுள்ள பிரசுரங்கள், விளம்பரங்களுக்கு எதிராக பொலிஸார், நேற்று(17) முதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரணைமடுவில் இராணுவ ஆதார வைத்தியசாலை

■ மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி - இரணைமடு பகுதியில், இராணுவ ஆதார வைத்தியசாலையை, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா, நேற்று (17) திறந்துவைத்தார்.

இவ்வைத்தியசாலையில், OPD & ETU, X-RAY DEPARTMENT, DENTAL CENTRE, PULHEEMS & ECG SECTION, DISPENSARY & LAB, WARD COMPLEX போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மேஜர் ஜெனரல் குணரத்தின, கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் சரவணபவன், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் ராகுலன், இராணுவ உயரதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டார்கள்.



கலாநிதி குமாரவடிவேல் குருபரன்

# சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியிலிருந்து இராஜினாமா

■ எம்.றொசாந்த்

கலாநிதி குமாரவடிவேல் குருபரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதத்தை, பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, கலைப் பீடாதிபதி மற்றும் சட்டத்துறைத் தலைவர் ஊடாக, நேற்று (17) அனுப்பி வைத்துள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவை, தான் சட்டத் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்காததன் காரணமாகவே, தான் இராஜினாமா கடிதத்தைக் கையளித்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

தன்னால் உயர்நீதிமன்றில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு, பல்வேறு காரணங்களுக்காக விவாதத்துக்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்க, தான் இவ்விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்றும் தொடர்ந்து தனது வாழ்வில் நிச்சயத்தன்மை இல்லாதிருக்க, தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும் இராஜினாமா கடிதத்தில், கலாநிதி குருபரன் குறிப்பிட்டுள்ளர்.

நடைமுறை அனுபவம் இல்லாத ஒரு சட்ட ஆசிரியராகத் தான் கடமையாற்றுவது இயலாத விடயமென்றும் தனது சட்டத் தொழில் மூலம், தான் செய்துவந்த சமூக பங்களிப்பும் ஊடாட்டமும் தனது ஆசிரியப் பணியில் இணைபிரியா அங்கம் என்றும் அது இல்லாத சட்ட ஆசிரியர் பணியில் தனக்கு ஈடுபடுவது திருப்தியைத் தர மாட்டாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முதியவர் மரணித்தாலே மற்றொருவருக்கு வாய்ப்பு

முதியவருக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் நபரொருவர் மரணித்த பின்னரே, காத்திருப்புப் பட்டியலில், ஆக ஆரம்பத்திலிருக்கும் நபருக்கு அதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றும் அதுவரையிலும் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், முதியோர்களுக்கான தேசிய செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திறைசேரியின் ஊடான நிதியொதுக்கீடுகள் இல்லாத காரணத்தால், முதியோருக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளோர் தொடர்ந்தும் காத்திருப்புப் பட்டியலிலேயே இருக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

416,667 பேருக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கே, இதுவரையிலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நிதியொதுக்கீடுகள், அண்மைக் காலத்தில் அதிகரிக்கப்படவில்லை என்றும் ஆனால், காத்திருப்புப் பட்டியலில் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. 6,000 ரூபாய்க்கும் குறைந்த வருமானமுள்ள 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே, ரூபாய் 2,000 வழங்கப்படுகின்றது. 416,667 பேர், அக்கொடுப்பனவுகளைத் தற்போது பெற்று வருகின்றனர். அதற்காக, மாதமொன்றுக்கு 833 மில்லியன் ரூபாயும் வருடத்துக்கு 10 ஆயிரம் மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்படுகிறது. இந்நிலையில், 100 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்தம் 5,000 கொடுப்பனவு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

அனுமதிப்பத்திரமின்றி

# மணல் கொண்டுசெல்பவர்களைக் கைதுசெய்ய உத்தரவு

அனுமதிப்பத்திரமின்றி மணலைக் கொண்டு செல்பவர்களைக் கைது செய்யுமாறு, பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹனவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1992ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்துக்கு அமைய, மணலைக் கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் அவசியமெனவும், அமைச்சரவைப் பத்திரத்தினூடாக அந்த அனுமதிப்பத்திர முறைமை இரத்து செய்யப்பட்டுள்ளது என்ற நிலைப்பாடு தவறான புரிதலால் ஏற்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இதனைக் கருத்திற்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி எ.எச்.எம்.டி நவாஸ், நீதிபதி ரோஹித ராஜகருணா ஆகியோர் பிரதி பொலிஸ் மா அதிபருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளனர்



# நேர்பட உரைத்தல்

கௌரி நித்தியானந்தம்



அரசியல் என்பது, பெண்களுக்கு மிகவும் சவாலான விடயம் என்பது உண்மைதான். ஆனால், எத்தகைய சவால்களையும் துணிந்து விருப்பத்துடன் ஏற்கும் பெண்களுக்கு, அது மிகவும் சுவாரசியமான விடயமும்கூட.

தேர்தல் களத்தில் போட்டியிடும் பெண்ணின் மீது, அவரது சமூகத்தின் அனைத்துப் பெண்களையுமே பிரதிநிதித்துவப்படுத்தும் பாரிய பொறுப்பு சுமத்தப்படுகிறது. இதனைச் சிறப்புற எதிர்கொள்வதற்கு, வெறுமனே அரசியலில் ஆர்வம் இருந்தால் மட்டும் போதாது; அதில் தொடர்ந்து பயணிப்பதற்குத் தேவையான வலுவும் புத்திசாதுர்யமும், துணிவும், ஆண்களைவிட சற்று அதிகமாகவே பெண்களுக்குத் தேவை.

இதற்கு முக்கியக் காரணம், இதுவரை காலமும் ஆண்களை மட்டுமே பெரும்பான்மையாகக் கொண்டிருந்த கட்சி அரசியலானது, மக்களின் பிரச்சினைகள் மீது மட்டுமே கட்டியெழுப்பப்பட்டமை ஆகும். அவர்கள், மக்களை எப்போதும் பிரச்சினையில் உழல வைத்து, அதனைக் காட்டியே ஒவ்வொரு முறையும் மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்துச் செல்கிறார்கள். மக்களின் பிரச்சினைகள் என்று தீர்கின்றனவோ, அன்று தமக்கான தேவையும் இல்லாமல்போய், மக்களின் தெரிவுகள் அதிகமாகிவிடும் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

அதனாலேயே, பதவிக்கு வந்த பின்னர்கூட, மக்களின் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்கும் நேரடி வழிமுறைகள் தென்பட்டாலும்கூட, அவற்றைத் தீர்க்கவிடாது தமக்குள்ளேயே போலியான அடிபாடுகளைத் தொடங்கி ஒவ்வொருவரும் தாம் மட்டுமே மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க அதிகம் சிரமப்படுகிறோம் என்பதாகக் காட்டுவதிலேயே காலத்தைச் செலவழிக்கிறார்கள். மக்களும், இத்தகைய படம்காட்டல்களை எளிதில் நம்பிவிடுவதுடன் அதையே விரும்பவும் தொடங்கி விடுகிறார்கள். இதுவே, வடமாகாண சபையின் தோல்வியிலிருந்து தமிழர்த் தரப்பு அரசியலின் அடிப்படையான அரசியல் தீர்வு என்பதை, இலங்கை சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்தே பேசிக்கொண்டேயிருப்பது என்பது வரை நீண்டு செல்கிறது.

ஆனால், பெண்களது பொதுவான நேர்படப் பேசும் திறனும், இரக்கச் சுபாவமும் அவர்களை அத்தகைய கேவலமான அரசியலைச் செய்ய விடுவதில்லை. அவர்கள், உண்மையாகவே பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என நினைப்பவர்கள். எனவேதான், இவர்கள் தமது பெயர்கள் வரலாற்றில் பேசப்பட வேண்டும் என்பதைவிட மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றியே அதிகம் அக்கறை காட்டுகிறார்கள். அரசியல் தீர்வு என்பது, தற்போதைய சூழ்நிலையில் கைக்கு எட்டாதது என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே, அதனைப் பெற்றுத் தருவோம் என்பதை மட்டுமே சொல்லிச் சொல்லி மக்களைக் காலம்காலமாக ஏமாற்றிக் கொண்டிருப்பதைவிட, நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை முன்வைக்கிறார்கள். ஆனால், இந்த அரசியல் நேர்மை என்பது, தேர்தலில் வெற்றியைப் பெற்றுத்தர உதவாது என்பதை இந்தப் பெண்கள் உணர்ந்து தாமும் ஏமாற்று அரசியலைப் பழகுவதற்கிடையில் அடுத்த தேர்தலில் அவர்கள் ஒதுக்கப்பட்டு மீண்டும் புதிதாக வேறொரு பெண் இறக்கப்படுகிறார். இதனால், சொல்லுவதைச் செய்யும் கிளிப்பிள்ளைகளாக அல்லாமல் சாணக்கியம் நிறைந்த 'அரசியலுக்குத் தகுதியான' பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது எப்போதும் எமது மத்தியில் எட்டாக்கனியாகவே இருந்துவருகிறது.

சில மாதங்களுக்கு முன்பு, பேஸ்புக் தளத்தில் பெண்களை 'ஹாப் பொயில்'கள் என்று நக்கலடித்துப் பல்வேறு பதிவுகளும் அதனை நிரூபிக்கும் வகையில் பல துறைசார் பெண்களின் படங்களும், காணொளிகளும் பதிவேற்றப்பட்டிருந்தன. இவற்றைப் பதிவேற்றியவர்களின் மனநிலை எத்தகைய கொடூரமானதாகவும் பக்கச் சார்பானதாகவும் இருந்தாலுமே, தற்போதைய தேர்தல் களத்தைப் பொறுத்தவரை 'நல்லது - கெட்டது' என்ற இரண்டுக்கும் இடையில் நின்றுகொண்டு சில பெண் வேட்பாளர்கள் அரைகுறைத்தனமான கருத்துகளை முன்வைப்பதைக் காண்கையில் இந்தகைய கோபம் வருவதைத் தடுக்க முடியாதிருக்கிறது. அதிலும் குறிப்பாக, வடக்கைச் சேர்ந்த பெண் வேட்பாளர் ஒருவர் "பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை வழங்க முன்வந்த ஒருத்தியைச் சிலர் சர்வாதிகாரம் சார்ந்த போக்குடன் கையாள்கிறார்கள்" என்றவாறாகத் தெரிவித்திருக்கிறார். ஜனநாயகக் கட்சி அரசியலின் அடிப்படையே, ஆண்களின் சர்வாதிகாரம் தான் என்ற அடிப்படை அரசியல் அறிவே இல்லாமல் தானா இவர் களத்தில் இறங்கியிருக்கிறார் என்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது. தவிர, குறித்த கட்சியில் இருக்கும் பலநூற்றுக் கணக்கான பெண்களைப் புறந்தள்ளி இவர் கொண்டுவரப்படுகிறார் என்றால், அதற்குக் காரணம் அனுதாப வாக்குகளைப் பெறுவார் என்பதற்கும் மேலாக, தாம் சொல்வதை மறுபேச்சின்றிக் கேட்கக்கூடிய ஒருவர் என்பதாகவே இருக்கும் என்ற அடிப்படைப் புரிதல்கூட இல்லாமலிருந்திருக்கிறது என்பது வேதனையளிக்கிறது.

யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதிக்காக, ஏழு ஆசனங்களுக்காகப் போட்டியிட ஒவ்வொரு கட்சியிலிருந்தும் குறித்த ஆசன எண்ணிக்கையைவிட மூன்று பேர் அதிகமாக, மொத்தமாகப் பத்துப்பேரைத் தெரிவுசெய்து அனுப்ப வேண்டும். ஒருவரை அல்லது இருவரை மட்டுமே பிரதான வேட்பாளராகக் கொண்டுக் களமிறங்கும் கட்சிகள் எவற்றுக்கும் ஏனைய வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் பெரும் சிரமம் இருக்கப்போவதில்லை. அவர்கள் யாரைப் புதிதாகக் களம் இறக்கினாலுமே, குறித்த பிரதான இருவரையும் தமது மூன்று விருப்புவாக்குப் பட்டியலில் சேர்க்கச் சொல்லியே பிரசாரம் செய்வார்கள். ஆனால், ஏற்கெனவே ஐந்து ஆசனங்களைத் தன்னகத்தே வைத்திருக்கும் ஒரு கட்சியில் புதிதாக ஒருவரை உள்ளே நுழைக்கிறார்கள் என்றால், குறித்த புதியவர் தனக்கான விருப்பு வாக்கில் ஒன்றைத் தன்னை உள்நுழைத்தவருக்கு விசுவாசமாகப் பரிந்துரைப்பார் என்ற ஒரேயொரு நம்பிக்கை மட்டுமேயாகும். இதன் மூலம், புதிதாகச் சேர்ந்தவரால் கிடைக்கப்பெறும் மேலதிக இரண்டாயிரமோ ஐந்தாயிரமோ வாக்குகள், ஏற்கெனவே உறுப்பினராக இருந்தவருக்கே போய்ச் சேரும்.

அதற்காக, அக்கட்சியில் இருக்கும் ஏனைய வேட்பாளர்கள் இவர்களை அப்படியே விட்டுவிடுவார்கள் என்றும் இந்தப் புதியவரால் கிடைக்கப்போகும் அந்த மீதி விருப்புவாக்குகளுக்காகத் தமக்குள் அடிபடமாட்டார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. அதனை, இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பாக யாழ். தேர்தல் தொகுதியில் களமிறக்கப்பட்டிருக்கும் சசிகலா அவர்களின் "நான் பங்கேற்கும் நிகழ்வுகளை விளம்பரமாக்கி, நான் தங்களுக்கு மட்டுமே ஆதரவாகப் பிரசாரம் செய்வது போன்ற விம்பத்தை உருவாக்கி, நான் ஏனைய வேட்பாளர்களுடன் பேணும் சுமுகமான உறவைச் சிதைக்க முயல்கிறார்கள்" என்ற கூற்று உறுதிப்படுத்துகிறது. இந்தத் தேர்தல் அரசியலின் அடிப்படையையே வேட்பாளர்களின் விருப்பு வாக்குகளுக்கான போட்டிதான் என்பதையே புரியாமல் களத்தில் இறக்கப்பட்டிருக்கிறார் என்பதை நினைக்கக் கவலையாக இருக்கிறது.

இந்த ஒரு காரணத்துக்காகவே, இதுகால வரைக்கும் எலியும் பூனைகளுமாக இருந்த மாவை, சுமந்திரன், சிறீதரன் மூவரும் கூட்டணியமைத்து, இந்தத் தேர்தலில் விருப்பு வாக்குகளைக் சேகரிக்கச் செல்வதை அவதானிக்க முடியும். தேர்தல் முடிந்ததும், மீண்டும் எலி - பூனைகளாகி, அவர் இதைச் செய்தார், நான் இதைச் செய்ய அவர்தான் விடவில்லை என்றுகொண்டு, மக்களை மீண்டும் ஏமாற்றத் தொடங்கி விடுவார்கள் என்பது வேறு கதை. ஆனால், தேர்தல் கள யதார்த்தம் இதுதான்.

அடுத்ததாக, சசிகலா அவர்கள் "பெண்களின் அரசியல் பிரவேசம் அவசியம் என்பவர்கள் அவர்களைச் சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும்" எனவும் கூறியிருந்தார். ஒருவேளை, இதே பகுதியில் தீவிரப் பிரசாரம் செய்துகொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான உமாசந்திரா பிரகாஷுக்கு வழங்கப்படும் சுதந்திரத்தில் ஐந்து சதவீதமேனும் தனக்கு வழங்கப்படவில்லை என நினைத்திருக்கலாம். எனக்கு, உமாவுடன் அரசியல் ரீதியாக பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருப்பினும், அவர் இன்று அரசியலில் தனக்கென்று பெற்றுக்கொண்ட நிலை ஏதோ திடீரென்று கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டியதல்ல. அதைப் பெறுவதற்கான கடின உழைப்பும் திட்டமிடலும் அவரிடம் ஆரம்பத்திலிருந்தே இருக்கிறது. சரியோ தவறோ தனக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தனக்குச் சாதகமாகவே பயன்படுத்திப் பயணித்துக் கொண்டிருக்கிறார். தமிழரின் பிரதான கட்சிகளின் பெண் வேட்பாளர்களின் சில சிறுபிள்ளைத்தனமான கருத்துகளைப் பார்த்தால் உமாவின் திறமை அரசியலில் ஏனைய பெண்களுக்கு வரவே இன்னும் பல காலமெடுக்கும் போலிருக்கிறது.

பணம் கொழிக்கும் நிறுவனங்களுக்கு அரசியல்கூட ஒருவித முதலீடுதான். ஆனால், புலம்பெயர் நிறுவனங்களோ அல்லது சொந்த மண்ணிலுள்ள நிறுவனங்களோ அவர்களின் பணத்தைப்பெற்று அதை நாம் எப்படி மக்களுக்காகப் பயன்படுத்தி, நாமும் சாதிக்கிறோம் என்பதில் தான் இருக்கிறது எமது ஆளுமை. அந்தவகையில், கூட்டமைப்புக்கு மட்டுமல்ல, வேறெந்த வடக்குத் தமிழ் அரசியல் கட்சிகளுக்குமே பணம் வாங்குவதில் இருக்கும் ஆர்வம் அதனைப் பயன்படுத்தி மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என நினைப்பதில் இல்லை. அதற்கான ஆளுமை இல்லை. ஒற்றுமையும் இல்லை.

வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட 21 கோடிக்கு என்னவாயிற்று என்று துணிச்சலுடன் கேட்ட தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர், சிறந்த பேச்சாளர், மகளிரணியின் செயலாளர் விமலேஸ்வரி தொடக்கம், அரசியலில் ஆண்களுக்குச் சரிசமனாக மல்லுக்கட்டி நிற்கக்கூடிய துணிச்சலுள்ள தமிழரசுக் கட்சியின் கொழும்பு பிரதித் தலைவர் மிதிலா வரை கட்சியில் ஏற்கெனவே இருக்கக்கூடிய சில ஆளுமைமிக்க பெண்களைப் புறம்தள்ளி வைத்துவிட்டுத்தான், தன்னைப் புதிதாகத் தேர்தலுக்காகப் பட்டம்கட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை, சசிகலா தெளிவுறப் புரிந்துகொள்ள வேண்டும்.

எதிர்த்துக் கேள்வி கேட்கும் பெண்கள் எவரும், தமக்கான விருப்புவாக்குகளைப் பெற்றுத்தர மாட்டார்கள் என்பதைவிட, ஆளுமையுள்ள பெண்களால் எதிர்காலத்தில் தமது ஆசனத்துக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பது பதவியிலிருப்பவர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே, பெண்களது பிரச்சினைகள் என்று வரும்போது, அதுவரை தமக்குள் அடிபட்டுக்கொண்டிருக்கும் ஆண்கள்கூட, தமக்குள் ஒன்றாகக் கூட்டுச் சேர்ந்து பெண்களை வெளியே தூக்கிப் போட்டுவிடுவார்கள். பிரதான கட்சிகளில் போட்டியிட நினைக்கும் ஒவ்வொரு பெண்களுமே, இந்த நிதர்சனத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்து, இங்கே சசிகலாவின் இன்னொரு கருத்தான "தமிழ்த் தேசிய நீக்க அரசியலை ஊக்குவிக்கும் முகமாக எந்தக் கூட்டத்திலும் நான் கலந்துகொள்ளவில்லை" என்ற கூற்று, தமிழ்த் தேசிய நீக்க அரசியலை நோக்கிய சிலரது பயணம், தேர்தல் காலத்தில்கூட வெற்றிகரமான ஒரு குறித்த கட்டத்தை எட்டிவிட்டிருப்பது புலனாகிறது. சமீபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் பஸீர் காக்கா சொல்லியது போலவே இம்முறை ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துபவர்களின் வெற்றி என்பது, தமிழர் மத்தியில் தமிழ்த் தேசிய நீக்க அரசியலைத் துரிதப்படுத்துவதில் இனிவரும் காலங்களில் பிரதான பங்கு வகிக்கவிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது.

அப்போது, தமிழீழ விடுதலைப் போராட்டங்கள் தற்காப்புக்காக எமது இனத்தைக் காப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டன என்றில்லாமல், சிங்களை மக்களை அழித்தொழிக்கவே அயல் நாடுகளின் உதவியுடன் உருவாக்கப்பட்டது என்றும் கதைகள் புனையப்படும். இவையெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டும் மக்கள் மீண்டும் தேசிய தலைவர் உருவாக்கினார் என்ற ஒரே காரணத்துக்காக கூட்டமைப்புக்கு வாக்குப் போட்டுக் கொண்டிருக்கத்தான் போகிறார்கள்.

இந்த உறுப்பினர்கள், கூட்டமைப்பை விட்டு வெளியே போனால், ஒரு வாக்குக்கும் பிரயோசனம் இல்லாதவர்கள் என்று மக்களுக்கும் தெரியும், அவர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும் மானம், ரோஷம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு தாங்கள் அடியோடு எதிர்க்கும் வன்முறையைக் கையிலெடுத்த போராட்ட அமைப்பு ஒன்று உருவாக்கிய கூட்டமைப்பில் தேர்தலில் போட்டியிட முடிந்தால்... அதே கட்சியில் காலம்காலமாக விசுவாசத்துடன் இயங்கிவந்த ஒரு பெண் வாங்கிய தங்களது மானம், ஆயிரம் கோடியென ஏலம்விட முடிந்தால்... பெண்கள் மட்டும் தம்மீதான விமர்சனங்களையும் தடைகளையும் கண்டு எதற்காகக் கூனிக் குறுகி அச்சப்பட்டு ஒதுங்க வேண்டும்?

சுற்றிவளைத்துப் பேசுதலும் சுற்றிச் சுற்றிப் பேசுதலுமே சாணக்கியமாகக் கருதப்படும் இன்றைய அரசியல் களத்தில், நேர்படப் பேசுதல் சாணக்கியம் அல்ல. எனவே, சசிகலா அவர்களே, உங்கள் இன்றைய நிலை வருந்தத்தக்கது தான். அதிலும் குறிப்பாக, "கட்சியின் மகளிர் அணி உட்பட சகல பெண்கள் அமைப்பு களின் ஆதரவைக் கோரும் எனக்குச் சிலர் தடையை ஏற்படுத்துவதால் எனக்கு ஆதரவு அளிக்க நினைக்கும் பெண்களுக்கு இது ஒரு சவாலாகக் காணப்படுவதாக" கூறியிருப்பது வேதனைக்குரியது. தமது கட்சியின் ஒரேயொரு பெண் வேட்பாளருக்குக்கூட உதவ முடியாமல் கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் மகளிரணியின், கையறுநிலையானது, பெண்களின் பிரதிநிதித்து வத்தை தேர்தலில் நேரடியாகப் போட்டியிடுவதன் மூலம் கொண்டு வருவதற்கான எந்தவொரு கொள்கையும் குறித்த கட்சியின் சமீபத்தைய நிகழ்ச்சி நிரலில் இல்லை என்பதையே தெளிவுறச் சுட்டி நிற்கிறது. அதற்குச் சென்றமுறை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட அனந்தியின் பாரிய வெற்றி தந்த அச்சம் கூட ஒரு காரணமாக இருக்கக்கூடும். இதனை, இந்தத் தேர்தலில் வாக்களிக்கப் போகும் ஐம்பத்தியாறு சதவீதப் பெண் வாக்காளர்களும் சரிவர உணர்ந்து கொண்டு தமது வாக்குகளை அளிப்பது சாலச் சிறந்தது.



## தளம் 3:

# ஈழத் தமிழ் அரசியல்;

# நேற்று - இன்று - நாளை

பாகம் 2:

**ஈழத்தமிழ் அரசியல் என்பது, யாரையெல்லம் உள்ளடக்கியது, எவரையெல்லாம் வெளித்தள்ளியது என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், இலங்கையினுடைய முதலாவது தமிழ் கட்சியாக இருந்தது, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், அதன் பின் செல்வாக்கு மிகுந்த கட்சியாக இருந்தது இலங்கை தமிழரசுக்கட்சி.**

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்ததே மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறித்த குடியுரிமைச் சட்டத்துக்கு காங்கிரஸ் ஆதரவளித்தது என்பதற்காகத்தான். 1972இல் உருவான தமிழ் ஐக்கிய கூட்டணியில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்திருந்தது.

வெறும் சட்டமாக இருந்த “சிங்களம் மட்டும்” சட்டம், அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டதும், பௌத்தத்துக்கு முன்னுரிமை என அரசமைப்பு ரீதியாகவே உறுதியப்படுத்தியமையும், பல்கலைக்கழக நுழைவில் தரப்படுத்தலும் என சிறிமாவோ பண்டாரநாயக்கவும் அவர்களது தோழர்களும் அமைத்த ஆட்சி, இலங்கையின் சிறுபான்மைகளுக்கு எதிரான மோசமான ஆட்சியாக அமைந்த நிலையில், 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான், இதொகாவின் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள், இந்தக் கூட்டணியில் இருந்து விலகுகிறார்.

தமது பாதை வேறு; தமது அரசியல் வேறு என்பதில் அவர் தெளிவாக இருந்தார். இந்தத் தனிநாட்டுக் கோரிக்கைக்குள், தேசியவாதத்துக்குள் இருந்து தமது அரசியல் கோரிக்கைகளை வெல்ல முடியாது என்பதில், அவர் திண்ணமாக இருந்தார்.

குடியுரிமைப் பிரச்சினை, அவர்களுடைய முக்கியமான பிரச்சினையாக இருந்த நிலையில், அதனை அவர்கள் பெற்றுக்கொண்டதன் மூலம் அந்த முடிவு சரியானது எனவும் நிரூபணமாகியிருக்கிறது.

முஸ்லிம் தேசியமும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்துடன் தனிவழியில் சென்றது. அவர்கள், நடைமுறைச் சாத்தியமான அரசியலை முன்னெடுத்தார்கள். எனவே, மலையகத் தமிழர்களும் முஸ்லிம்களும், தாமாகவே தெரிவு செய்து ஈழத்தமிழ் அரசியல் நீரோட்டத்திலிருந்து விலகிக்கொண்டார்கள்.

எவரும் அவர்களை விலக்கி வைக்கவில்லை. சிவகுமார் குறிப்பிட்டதைப்போல, சந்திரசேகரன் போன்றோர் மீண்டும் இந்த நீரோட்டத்தில் எப்படி இணைய முடியும் என்ற சிந்தனைகளை விதைத்திருந்தாலும், அடிப்படையில் அது வேறுபட்ட நீரோட்டமாகவே இயங்குகிறது. தமிழ்த் தேசிய அரசியல், அவர்களை ஒடுக்கி வைத்தது என்பது வரலாற்றோடு இயைந்த ஒரு விடயமல்ல என்ற கருத்தை முன்வைத்து, அஷோக்பரன் தமது அபிப்பிராயங்களைத் தொடர்ந்தார்.

ஈழத் தமிழர் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சட்டச் சிக்கல்கள் பற்றிய கேள்விக்கு, இந்தச் சிக்கலை “தேச அரசு” எனும் எண்ணக்கருவில் இருந்து பார்க்க வேண்டும். ஓர் அரசு; ஒரே தேசம் எனும் எண்ணக்கரு, அங்கே வருகிறது. அதனால் தான், ஒரே நாடு; ஒரே தேசம் எனும் முழக்கமும் எழுகிறது.

நாம் ஒரு சிவில் தேசியத்தை, வார்த்தைகளுக்குள் வைத்துக்கொண்டு, அதற்குள் ஒரு பெரும்பான்மையின மேலாதிக்க அரசியலைச் செய்துகொண்டிருக்கிறோம். இதுதான், இந்த இனப்பிரச்சினைக்கான முக்கியமான காரணம். தொடக்கத்தில், மேற்கில் கல்விகற்ற தமிழ்த் தலைமைகளும் சிவில் தேசமொன்றை கட்டியெழுப்புவதற்கான முயற்சியில் தான் இருந்தார்கள்.

ஆனால், கே.எம். டீ சில்வா சொல்வதைப்போன்று, “சிங்கள சமூகம் என்பது சிறுபான்மை மனப்பான்மை கொண்ட பெரும்பான்மை”ஆக உள்ளது. இந்த அடிப்படையில், சிங்கள பௌத்த தேசியவாத எழுச்சியானது, அநகாரிக தர்மபால முதலே, அதற்கான சமூக ரீதியான அடித்தளத்தை கொண்டிருந்தது.

அந்த அடித்தளத்திலிருந்தே பண்டாரநாயக்கவின் பஞ்சமா பலவேகய (ஐம்பெரும் சக்திகள்) போன்றவை எல்லாம் எழுகின்றன. தமிழ்ச் தேசியமானது, சிங்கள பௌத்த பெரும்பான்மைவாத தேசியத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளும் தற்காப்புத் தேசியமாகவே உருவானது. இந்தச் சமூக-வரலாற்று சூழலில், இன்றைக்கு இலங்கையில் ஓர் அரசுக்குள் ஒரு தேசம்தான் இருக்கலாம்; அதுவும் ஒற்றையாட்சித் தேசம் தான் இருக்கலாம் எனும் அடிப்படைப்புரிதல் உருவாகிவிட்டது.

அதனால் தான், மிகச் சாதாரணமான அதிகாரப் பரவலாக்கலாக அமைந்த 13ஆம் திருத்தச் சட்டத்தைக்கூட நாட்டைப் பிரிக்கும் விடயமாகப் பெரும்பான்மை தேசிய அரசியல் பார்த்தது.

> **தமிழ்த் தேசக் கட்டுமானம் என்பது, பழைமையை எமக்குச் சார்பாக மீளக்கட்டமைப்பதாக இல்லாமல், சமூக, நீதி, ஆட்சியியல் தத்துவத்தின்படி இருக்க வேண்டும். இதனை, பெரியாரிடமிருந்தும் திராவிடக் கட்சிகளிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ளலாம்**

இங்கே, நம் அடிப்படைகளில் சில மாற்றங்களை கொண்டுவர வேண்டும். அது சமூகத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும். மேலிருந்து கீழாக அதனைச்செய்வது சாத்தியமற்றது. எப்படித்தான் சட்டரீதியாக மாற்றங்களைக் கொண்டுவர முயன்றாலும், அதற்கு முரணாகக் கீழிருந்து எழுச்சி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அந்த எழுச்சிக்கேற்பவே, சட்டங்களில் பொருள்கோடலும் மாறிக்கொண்டிருக்கும்.

இங்கேயுள்ள அரசியல் கலாசாரமும் சட்டக் கலாசாரமும், இந்தக் கணம்வரை பன்மைத் தேசிய கருத்துகளுக்கு இடம்கொடுப்பதாக இல்லை என பதிலளித்தார்.

இதனைத்தொடர்ந்து, அஷோக்பரனுக்கும் குருபரனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலின் இரண்டாம் பகுதி, நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அவ்வுரையாடலில் குருபரன் தெரிவித்த கருத்துக்கள் இவை:

“தேசக் கட்டுமானத்தில் வரலாற்றைப் பயன்படுத்துவது தொடர்பாக எனக்கு மாற்றுக்கருத்துள்ளது. நாம், எமது தேசம் என்கிற கோரிக்கையை வைப்பதற்கு, எமக்கு நீண்ட நெடிய வரலாறு உள்ளது எனும் வாதத்தை வைக்கவேண்டிய அவசியம் இல்லை என நான் நினைக்கிறேன்.

“தேசம் என்பது அரசியல் கோரிக்கை. அது, வரலாற்றுக் கோரிக்கை அல்ல. இக்கோரிக்கை, எமது அண்மைக்கால வரலாற்றில் நாம் எதிர்கொண்ட பிரச்சினைகளின் அடிப்படையில் உருவானது.

“நாம் எத்தனையாம் நூற்றாண்டில் இங்கே வந்தோம் என்று இங்கே இருந்துகொண்டு அரசியல்வாதிகள் செய்யும் ஆய்வுகள் பயனற்றவை.

> **எம்முடைய தேசக் கட்டுமானம் என்பது, அநகாரிக தர்மபாலவை பார்த்து வளர்த்துக்கொள்ளப்பட வேண்டியதல்ல. எம்மிடம் இருந்த நிழல் அரசில்கூட முற்போக்கான அம்சங்கள் இருந்தன**

“எமது அரசியல் கோரிக்கைக்கும் நாம் எவ்வளவு காலம் இலங்கையில் இருக்கிறோம் என்பதற்கும் இடையில் ஒரு சம்பந்தமும் இல்லை. அடுத்த விடயம், நிலத்தொடர்ச்சி தொடர்பானது. சுயநிர்ணயக் கோரிக்கைக்கு, நிலத்தொடர்ச்சி, நில எல்லைகள் முக்கியமாக இருக்கிறது. ஆனால், அந்த எல்லைகள் எமக்கு மட்டுமே உரிமையானவையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. வடக்கு, கிழக்குத் தாயகம் என்று சொல்லும்போதும் அதை நான் தமிழர்களுக்கு மட்டுமேயான தாயகமாகச் சொல்லவில்லை.

“அங்கே முஸ்லிம்களுக்கும் இடமுள்ளது; சிங்களவர்களுக்கும் இடமுள்ளது. அங்குள்ள முஸ்லிம்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அங்கே தம்மை ஒரு தேசமாகக் கருதிக்கொள்வதா அல்லது சிறுபான்மைகளாக கருதிக்கொள்வதா என. முஸ்லிம்கள் சிங்களவர்களோடு தம்மைச் சிறுபான்மையினராகவும் தமிழ்த் தரப்போடும் பேசும் போது தம்மை தேசமாகவும் காட்டிக்கொள்வதில் எனக்கு முரண்பாடு உண்டு.

“ஆனாலும், அதனை முஸ்லிம்களே தீர்மானிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கினுள் தமக்கு ஒரு சுயாட்சி அலகு வேண்டுமா அல்லது உரிமைகள் மதிக்கப்படுகின்ற “சிறுபான்மை” அந்தஸ்து வேண்டுமா என்பதைத் தாமே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதனடிப்படையில், முஸ்லிம்களுடன் பேசித் தீர்வுகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அதேபோலத்தான் சிங்களவர்களும்.

“வடக்குக் கிழக்கில் உள்ள சிங்களவர்களுக்கும் நிச்சயமாக உரிமை உள்ளது. அரசியல் நோக்கத்துடன் வடக்குக் கிழக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களது உரிமை தொடர்பாகக்கூட நாம் கரிசனையாக இருக்கவேண்டும். அவர்களைக் கடலில் தூக்கிப் போட்டுவிடுவது எனும் அடிப்படையில், தமிழரது தேசியக்கோரிக்கை இருக்கக்கூடாது.

> **சுயநிர்ணயக் கோரிக்கைக்கு, நிலத்தொடர்ச்சி, நில எல்லைகள் முக்கியமாக இருக்கிறது. ஆனால், அந்த எல்லைகள் எமக்கு மட்டுமே உரிமையானவையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை**

“ஒரு காலத்தில், இயக்கங்கள் தோற்றம்பெற்ற காலத்தில், தமிழ்த் தேசம் எப்படி இருக்கவேண்டும் என்கிற ஆரோக்கியமான உரையாடல்கள் இருந்தன. சமதர்மக் கோட்பாட்டின் அடிப்படையிலான பொருளாதார அமைப்பு தொடர்பான உரையாடல் இருந்தது. சாதிப்பிரச்சினை தொடர்பான உரையாடல்கள் இருந்தன. இப்போது பார்த்தால், தமிழ்த் தேசியம் என்பது வெற்றுக்கோஷமாக மாறியிருக்கிறது.

“தமிழ்த் தேசக் கட்டுமானம் என்பது, பழைமையை எமக்குச் சார்பாக மீளக்கட்டமைப்பதாக இல்லாமல், சமூக, நீதி, ஆட்சியியல் தத்துவத்தின்படி இருக்க வேண்டும். இதனை, பெரியாரிடமிருந்தும் திராவிடக் கட்சிகளிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ளலாம்.

“இதைச்சொல்வது பலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். எம்முடைய தேசக் கட்டுமானம் என்பது, அநகாரிக தர்மபாலவை பார்த்து வளர்த்துக்கொள்ளப்பட வேண்டியதல்ல. எம்மிடம் இருந்த நிழல் அரசில்கூட முற்போக்கான அம்சங்கள் இருந்தன.

“திருவள்ளுவர்தான் எமது சமூக நீதியினுடைய காவலர் என்றால், அவர் சொன்னவை உள்ளன; அவைதான் எமக்கு ஆதாரம். எமக்கென்று ஒரு சமூக நீதிப் பாரம்பரியம், வரலாறு உள்ளது. அதை நாம் தேடிப்போக வேண்டும்.

> **திருவள்ளுவர்தான் எமது சமூக நீதியினுடைய காவலர் என்றால், அவர் சொன்னவை உள்ளன; அவைதான் எமக்கு ஆதாரம். எமக்கென்று ஒரு சமூக நீதிப் பாரம்பரியம், வரலாறு உள்ளது. அதை நாம் தேடிப்போக வேண்டும்.**
>
> **அதைக்கொண்டே எமது ஆட்சியை, தேசத்தை அமைக்க வேண்டும். சிங்கள பௌத்த மேலாதிக்க அரசு போன்ற ஒன்றைத்தான் நாமும் அமைக்கப்போகிறோம் என்றால், அந்த தமிழ்த் தேசியவாத மேலாதிக்க அரசியலை எதிர்க்கும் முதலாவது ஆளாக நான் இருப்பேன்**
>
> **இந்தியச் சூழலில் தமிழ்த் தேசியம் தொடர்பான உரையாடல்கள் என்று வரும்போது, சீமானை மட்டும் வைத்து தமிழ்த் தேசிய உரையாடல்களைப் பார்க்கக்கூடாது**

“அதைக்கொண்டே எமது ஆட்சியை, தேசத்தை அமைக்க வேண்டும். சிங்கள பௌத்த மேலாதிக்க அரசு போன்ற ஒன்றைத்தான் நாமும் அமைக்கப்போகிறோம் என்றால், அந்த தமிழ்த் தேசியவாத மேலாதிக்க அரசியலை எதிர்க்கும் முதலாவது ஆளாக நான் இருப்பேன்.

“நான், பெரியாரால் அவர் முன்வைத்த சமூக நீதி வேலைத்திட்டத்தால், திராவிடக் கட்சிகள் தொடங்கிய இடத்தாலும் அவர்களது சமூகநீ தி சாதனைகளாலும் ஈர்க்கப்படுகிறேன். இந்தியச் சூழலில் தமிழ்த்தேசியம் தொடர்பான உரையாடல்கள் என்று வரும்போது, சீமானை மட்டும் வைத்து தமிழ்த் தேசிய உரையாடல்களைப் பார்க்கக்கூடாது.

“சீமானுக்கு முந்தைய தமிழ்த் தேசிய உரையாடல்களில், திராவிடத் தேசியவாதத்தினுள்ளே தமிழ்த்தேசியவாதத்தின் இருப்பு என்பது அந்த வரலாற்றுச் சூழ்நிலைகளுக்குள் வளர்ந்துள்ளது. இங்கே, ஈழத் தமிழ்த் தேசியம் இங்குள்ள வரலாற்றுச் சூழ்நிலைகளின்படி வளர்ந்துள்ளது. இவையிரண்டுக்கும் ஒன்றுடன் ஒன்றுக்கான ஒத்துழைப்பு இல்லாமலில்லை. நாம் அங்கிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

“ஆனால், ஈழத்தமிழ்த் தேசியத்தையும் தமிழ்நாட்டின் தமிழ்த்தேசிய அரசியலையும் ஒன்றாகப் பார்ப்பதோ, அவையிரண்டும், ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டும் என்றோ கருதுவது ஈழத்தமிழ் தேசிய அரசியலைக்கூட விளங்கிக்கொள்ளாத தன்மையைத்தான் காட்டுகிறது என நான் நினைக்கிறேன்.

“தமிழ்நாடு, திராவிடமா தமிழ்த்தேசியமா எனும் விவாதத்துக்குள் போகட்டும். எனக்கு, அதில் நிலைப்பாடுகள் இருக்கலாம். ஆனால், அது அவர்களுடைய விவாதம். அதனை அவர்கள் செய்துகொள்ளட்டும். ஆனால், அதுவும் இதுவும் ஒன்று என்று நினைத்தால் அது மிகவும் தவறானது. நாம் உலகம் பூராகவும் உள்ள தேசிய இனங்களின் போராட்டங்களில் இருந்து கற்றுக்கொள்கிறோம். அது ஸ்கொட்லாந்தாக இருக்கலாம், குர்தியர்களின் போராட்டமாக இருக்கலாம், அனைத்திலிருந்தும் கற்றுக்கொள்கின்றோம். ஆனால், எமது சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையும் தேசியம் தொடர்பான சிந்தனையும் எமது அனுபவங்களில் காலூன்றி நிற்கவேண்டும்.




தொடரும்...

# கொரோனா தாக்கமும் தொடக்கநிலை வணிகங்களும்





அனுதினன் சுதந்திரநாதன்

இலங்கை போன்றதொரு நாட்டில், தொடக்கநிலை வணிகங்களின் ஆரம்பமானது, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து வரவேற்கத்தக்க வகையிலும் பிரமிப்பைத் தரக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. அமெரிக்காவின் சிலிக்கன்வெளியை ஒத்தவகையில், இந்து சமூத்திரத்தில் இலங்கை தொடக்கநிலை வணிகங்களுக்கு ஒரு சாதகமான இடமாக உருப்பெற்று வந்துகொண்டிருக்கிறது. உண்மையில், கொரோனா தாக்கம் பல்வேறு வணிகங்களுக்கும், வணிகர்களுக்கும் பெரும் இடையூறாக மாறியிருக்கின்ற நிலையில், இந்த இடர்காலத்தைப் பயன்படுத்திக்கொண்டுகூட நிறைய தொடக்கநிலை வணிகங்கள், இலங்கையில் உருப்பெற்றதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஆனால், அவ்வாறு குறுங்காலத்தில் உருவாக்கம் பெற்று, மக்களின் வரவேற்பைப் பெற்ற வணிகங்கள் நீண்டகால நிலைத்திருத்தல் தன்மையைக் கொண்டிருக்கிறதா என்கிற கேள்விக்குறியை ஏற்படுத்தியிருக்கின்றன.

கொரோனா தாக்கமானது, வணிகங்கள் மீது நிதி ரீதியாக மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அது, தொடக்கநிலை வணிகங்களையும் விட்டு வைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். சாதாரணமான நிலையிலேயே, தொடக்கநிலை வணிகங்களுக்கு வங்கிகளும் சரி, நிதி நிறுவனங்களும் சரி போதுமான நிதி ரீதியான ஒத்துழைப்பை வழங்குவதில்லை. அதிலும், இப்படியான சூழ்நிலை ஏற்படுகின்றபோது, தொடக்கநிலை வணிகத்துறையானது தனித்துவிடப் பட்டதுபோல பல இன்னல்களை சந்திக்கிறது என்பதே உண்மை.

உதாரணமாக, உங்களிடம் ஒரு தொழில் முயற்சியைச் செய்வதற்கான சிந்தனை (idea) இருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் இருக்கிறது. ஆனால், அதனை ஆரம்பித்துக்கொண்டு நடத்த, போதிய நிதியில்லை. இந்நிலையில், உங்களுடைய திட்டங்களை நம்பியோ, உங்களுடைய கல்வித் தகைமைகளை நம்பியோ உங்களுக்கு நிதியியல் சார் உதவிகளை வழங்க எத்தனை நிறுவனங்கள் தயாராகவிருக்கின்றன என சிந்தித்துப் பாருங்கள். இந்த ஆரம்ப நிதியைப் பெற, நீங்கள் எத்தனைக் கஷ்டங்களைத் தாண்ட வேண்டியிருக்குமெனச் சிந்தித்து பாருங்கள். ஒருவேளை, அதனை நீங்கள் பெற்றுக்கொண்டாலும், கொரோனா போன்ற எதிர்பாராத நிலைமைகளில், உங்களுக்கு உதவக்கூடிய ஏதேனும் நிதி நிறுவனங்கள் இருக்கிறதா எனச் சிந்தித்துப் பாருங்கள். இந்த ஆரம்ப முடக்கநிலைதான், பல புத்தாக்கச் சிந்தனைகொண்ட தொடக்கநிலை வணிகங்கள் இலங்கையில் உருப்பெறாமல் போகவும், நிலைத்திருக்க முடியாததாகவும் இருக்கிறது. இந்தநிலையில், மாற்றத்தைக் கொண்டுவரத்தக்க வகையில், அரசாங்கமானது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது

2019ஆம் ஆண்டில், இலங்கையின் எழுத்தறிவு வீதம் 91.7% ஆகவும் இலத்திரனியல் சார் அறிவு வீதம் 44.3% ஆகவும் இருந்திருக்கிறது. அத்துடன், தொலைபேசிச் சேவையைப் பாவிப்பார்களின் எண்ணிக்கை, 32.9 மில்லியனாக இருந்திருக்கிறது.

> **நாட்டின் எதிர்கால அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டும் இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் தங்கள் இறுக்கமான கொள்கை கட்டமைப்பில் மாற்றங்களை செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது இல்லாவிட்டால் கொரோனா ஏற்படுத்தப்போகும் பொருளாதார பாதகங்கள் மிகப்பாரதூரமாக இருக்கும்**

இது, நாட்டின் மொத்த சனத்தொகையில் 150% ஆகும். அதுபோல, இணையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 11.8 மில்லியனாக இருந்திருக்கிறது. இது, மொத்தச் சனத்தொகையில் 54% ஆக இருக்கிறது. இவை அனைத்துமே, கொரோனா இலங்கையில் பரவ முன்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளாகும். இந்த ஆய்வுகளின் தொடக்கநிலை வணிகங்களைத் தொடங்க கிடைக்கப்பெறுகின்ற நிதி தொடர்பான ஆய்வானது அதிர்ச்சி தருவதாக இருக்கிறது.

வணிகமொன்றைப் புதிதாக ஆரம்பிக்கின்றவர்களில் 51% ஆனவர்கள், தங்களுடைய சொந்த சேமிப்பை ஆதாரமாகக் கொண்டே ஆரம்பிக்கிறார்கள். இவர்களுக்கு நிதியியல் நிறுவனங்கள் மூலமாக வெறும் 8% ஆன பங்களிப்பே கிடைக்கிறது. இந்த 8% உம், மிகப்பெரும் நிறுவனங்களின் உறுதுணையுடன் ஆரம்பிக்கப்படும் புதிய வணிகங்களுக்கே கிடைக்கிறது என ஆய்வறிக்கை சொல்லுகிறது. அப்படியானால், சாதாரணமான ஒருவர், தனது சிந்தனையை வணிகமாக்கிக்கொள்ள இந்த அரசாங்கமும் நிதியியல் நிறுவனங்களும், எந்தவொரு பங்களிப்பையும் வழங்கவில்லை என்பதையே இது காட்டி நிற்கிறது.

கொரோனாவுக்குப் பின்னதாக அதிகளவில் வாய்ப்புகளைக் கொண்ட தொழில் முயற்சியாக, தொடக்கநிலை வணிகங்கள் இருக்கின்றன. அதுபோல, அதிகளவிலான நிதியியல் பிரச்சினைகளையும் மூடுவிழா காணும் பாதிப்பைக் கொண்ட துறையாகவும் இது இருக்கிறது.

உதாரணத்துக்கு, இலத்திரனியல் சேவைகளைப் பயன்படுத்தப் பின்நின்றவர்கள், அதன் பாதுகாப்புத்தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பியவர்கள், தொழில்நுட்ப மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் பின்தங்கி நின்றவர்கள் எல்லோருமே, இன்று கொரோனா காலப்பகுதியில் விரும்பியோ விரும்பாமலோ, இந்த மாற்றங்களை ஏற்க ஆரம்பித்து விட்டார்கள்.

இன்று அவர்கள் இதன் பயன்பாட்டை உணர ஆரம்பித்து விட்டார்கள். இதனால், புதிய வணிகங்களான தொடக்கநிலை வணிகங்களுக்கு வரவேற்பும் சந்தை வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

ஆனால், இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் வணிகத்தை விரிவுபடுத்துகின்றபோது தொடக்கநிலை வணிகங்கள் இந்த இடர்நிலைமையில் பல்வேறு சிக்கல் நிலைமைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது.

உதாரணமாக, நீங்கள் இணைய வழியாகப் பொருட்களை விற்பனை செய்கின்ற வணிகத்தைக் கொரோனாவுக்கு முன்பிருந்து நடத்தி வருகிறீர்கள் என வைத்துக்கொள்வோம். உங்களுக்குச் செலவுகள் போக, போதுமான இலாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் ஊழியர்களைப் பயன்படுத்தி வணிகத்தை விரிவுபடுத்திக் கொண்டு இருக்கிறீர்கள். இந்தச் சமயத்தில், கொரோனா தாக்கம் ஏற்படுகிறது. முதல் மாதம் எல்லோரைப் போலவும் உங்களது சேவைகளும் வருமானமும், கட்டாயம் பாதிக்கபட்டிருக்கும். அதற்குப் பின்னதாக, இணையவழியாகப் பொருட்கள், சேவைகளை வாங்க மக்கள் எத்தனிக்கின்றபோது, உங்களுக்கான வாய்ப்புகளும் உருவாகத் தொடங்கும்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கொள்ளவும் உங்கள் இணையத்தை மக்கள் நாடச் செய்யவும், நீங்கள் சந்தைப்படுத்துதல் செலவுகளைச் செய்யவேண்டியதாக இருக்கும். ஏற்கெனவே, ஊழியர் செலவுகள், பொருட்களுக்கான செலவுகள் என்பவற்றுடன், இந்தச் செலவும் உங்களுக்கு ஒரு சுமையாக வந்துசேரும். வாடிக்கையாளரை அதிகரிக்காமல், வணிகத்தைக் கொண்டு நடத்த முடியாதென்கிற நிலைமையில், நீங்கள் சந்தைப்படுத்தல் போன்ற செலவுகளுக்கு முன்னுரிமை வழங்கிக்கொண்டு, ஊழிய செலவுகளுக்கு வங்கியை அல்லது நிதியியல் நிறுவனங்களை நாடுகிறீர்கள்.

ஆனால், அங்கு உங்கள் வணிகம் புதியது மற்றும் இடர்கள் (Risk) கூடியது என்கிற அடிப்படையில், நிதியியல் தேவைகள் மறுக்கப்படுகிறது என வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் நிலை என்ன ஆகும், உங்கள் ஊழியர்கள் நிலை என்ன ஆகும்?

இந்த ஓர் உதாரணம் போதும், இன்றைய சூழ்நிலையில், பெரும்பாலான தொடக்கநிலை வணிகங்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினையை தெளிவப்படுத்துவதற்கு..! 2019ம் ஆண்டின் ஆய்வுகளின்படி, இலங்கையில் 47.6% ஆன புத்தாக்க வணிகங்கள் இணையவழி பொருட்கள், சேவைகளை விற்பனை செய்கின்ற வணிகங்களாக இருக்கிறது. 19.1% ஆனவை இலத்திரனியல் நிதியியல் சேவைகளை வழங்குவதாக இருக்கிறது. 13.1% மென்பொருள்சார் புத்தாக்க வணிகங்களாக இருக்கிறது. 7.1% ஆனவை பொறியியல் சார்ந்ததாகவும் 4.8% ஆனவை கணக்கீட்டு புத்தாக்க வணிகங்களாவும் இருக்கிறது. இவை தவிர்ந்து 8.4% ஆனவை ஏனைய துறைசார் புத்தாக்க வணிகங்களாக இருக்கிறது.

எனவே, இந்த வணிகங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஏற்படவிருக்கும், குறுங்கால மற்றும் நீண்டகால பாதிப்புகள் தொடர்பில் அரசு கவனஞ்செலுத்த வேண்டியது அவசியமாகிறது.


தற்போதைய நிலையில் நிலவிவரும் இறுக்கமான இறக்குமதி கட்டுப்பாட்டு நடைமுறைகள், நிதியியல் ரீதியான சேவைகளைப் பெறுவதில் தொடக்கநிலை வணிகங்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாடுகள்.

அரச நிர்வாகத்தில் காணப்படும் தாமதத்தினால் இழக்கப்படும் வாய்ப்புகள், இறுக்கமான வரி சுமைகள் என்பனவும் இந்த வணிகத்தின் நிலைத்திருத்தலுக்கு மிகப்பெரும் தலைவலியாக மாறியிருக்கிறது.


தொடக்கநிலை வணிகங்களை நம்பி இலங்கையில் நேரடியாகவோ மறைமுகமாவோ, சுமார் 1 மில்லியன் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.


எனவே, அவர்களின் எதிர்கால வாழ்க்கையையே கருத்தில்கொண்டும் நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை கருத்திற்கொண்டும் இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் தங்கள் இறுக்கமான கொள்கை கட்டமைப்பில் மாற்றங்களை செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது இல்லாவிட்டால் கொரோனா ஏற்படுத்தப்போகும் பொருளாதார பாதகங்கள் மிகப்பாரதூரமாக இருக்கும்.

## வாராந்த பங்குச் சந்தை



13.07.2020 - 17.07.2020




### 13.07.2020

நெஸ்லே லங்கா, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.3 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கலப்பு ஈடுபாடு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. மேலும், சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், செலான் வங்கி மற்றும் டோக்கியோ சீமெந்து கம்பனி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு கொள்வனவில் அதிகளவு ஈடுபட்டனர்.

### 14.07.2020

சிலோன் டொபாக்கோ கம்பனி, கொமர்ஷல் வங்கி மற்றும் கொமர்ஷல் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர்ப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு செலான் வங்கி, சம்பத் வங்கி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு அக்சஸ் என்ஜினியரிங், LOLC ஹோல்டிங்ஸ் மற்றும் டோக்கியோ சீமெந்து கம்பனி பங்குகள் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

### 15.07.2020

செலிங்கோ இன்சூரன்ஸ், சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் மறைப் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு பெறுமதி ரூ. 464 மில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு ஹற்றன் நஷனல் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கலப்பு ஈடுபாடு சம்பத் வங்கி மற்றும் செலான் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், ஹேலீஸ் ஃபப்ரிக் மற்றும் ஃபர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் பெருமளவு ஈடுபட்டனர்.

### 16.07.2020

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 567 மில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு சம்பத் வங்கி மற்றும் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், டோக்கியோ சீமெந்து கம்பனி மற்றும் ஃபர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் பெருமளவு ஈடுபட்டிருந்தனர்.

### 17.07.2020

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், சிலோன் டொபாக்கோ கம்பனி மற்றும் ஹற்றன் நஷனல் வங்கி ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளை பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 932 மில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு சம்பத் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு ஹற்றன் நஷனல் வங்கி, பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் மற்றும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், டோக்கியோ சீமெந்து கம்பனி மற்றும் அக்சஸ் என்ஜினியரிங் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

வாரத்தில் அபவிசு 0.08% சரிவையும் S&P SL20 0.62% சரிவையும் பதிவு செய்திருந்ததுடன், சராசரி தினசரி புரள்வு 1.03 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது.

# வட்டி வீதங்கள் மேலும் குறைப்பு

## இலங்கை மத்திய வங்கி தீர்மானம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இரண்டாம் அரையாண்டில் மேலும் துரிதப்படுத்தும் நோக்கில், வட்டி வீதங்களை மேலும் குறைக்கும் வகையில், நாணயக் கொள்கையை மேலும் தளர்த்தியுள்ளது. இதன் பிரகாரம், 100 அடிப்படைப் புள்ளிகளால் கடன் வழங்கல் வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில், இலங்கையின் பொருளாதாரம் 1 முதல் 1.5 சதவீத வளர்ச்சியை எய்துவதற்கு வழிகோலும் வகையில், நுகர்வை ஊக்குவிப்பதற்காக இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக, இலங்கை மத்திய வங்கி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தது. இதனூடாக, கடன்களின் வட்டி வீதங்கள் ஒற்றை இலக்கப் பெறுமதிக்கு வீழ்ச்சியடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நாணயக் கொள்கை மீளாய்வின் அனுகூலங்களைத் துரிதமாக



வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க, வங்கிகள் மற்றும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டீ.லக்ஷ்மன் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக நான்காவது தடவையாக, இலங்கை நாணயச் சபையினால் வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வியாபாரங்களை மீளக் கட்டியெழுப்பப் பங்களிப்பு வழங்குவது எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

தொடர்ச்சியாக, வங்கிகள் மத்தியில் அதிகளவு திரள்வுத் தன்மை காணப்பட்ட போதிலும், தனியார்த் துறைக்கு வழங்கப்படும் கடன் வசதி 2020 மே மாதத்தில் பெருமளவு குறைந்திருந்தது. 2019 டிசெம்பர் மாதம் முதல் தனியார்த்துறைக் கடன் வழங்கல் அதிகரித்த போதிலும், 2020 மே மாதத்தில் 6.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. (ஏப்ரல் மாதத்தின் 7.6 சதவீதத்திலிருந்து). 2020ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில், தனியார்த் துறைக்கான கடன் வழங்கல், 89.9 பில்லியன் ரூபாயினால் மாத்திரம் அதிகரித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

சிரேஷ்ட பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, கொவிட் பரவல் காரணமாக எழுந்த பின்னடைவிலிருந்து, தனியார்த் துறை இன்னமும் முழுமையாக மீட்சியடைய ஆரம்பிக்கவில்லை. பொருளாதாரத்தின் ஏனைய பிரிவுகளுடன் ஒப்பிடுகையில், சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் கொள்ளளவு மிகவும் சிறிதாக அமைந்துள்ளது. அத்துடன், வங்கிகள் கடன் வசதிகளை வழங்குவது தொடர்பில் மிகவும் கவனமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. தொடர்ச்சியாக வட்டி வீதங்கள் குறைக்கப்படுகின்றமை காரணமாக, இலங்கை நடப்பு ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் உறுதியான மீட்சியை பதிவு செய்யும் என எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

செலான் டிகிரி குழந்தைகளுக்காக

# டிஜிட்டல் நிகழ்வுகள்




பல சமூக ஊடகத் தளங்களில், பலவிதமான புதுமையான டிஜிட்டல் செயற்பாடுகள் மூலம், செலான் டிகிரி கணக்கு வைத்திருப்பவர்களைச் சென்றடைந்ததன் மூலம், தனது இளம் வாடிக்கையாளர்களைக் கொவிட்-19 முடக்கத்தின் போது தொடர்பில் வைத்திருந்தது. அத்துடன், டிஜிட்டல் போட்டிகளில் வென்ற குழந்தைகளுக்கு, இந்த நெருக்கடியான காலங்களில் பரிசுகள் அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்கப்படுவதை உறுதிசெய்தது.

சந்தையில் முன்னணி சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் ஒன்றாக, செலான் டிகிரி அமைந்துள்ளது. மேலும், ஆண்டு முழுவதும் குழந்தைகளுக்கு எப்போதும் புதுமையான மற்றும் மகிழ்ச்சிகரமான சலுகைகளை வழங்கி வருகிறது. முழு நாடும் லொக்டவுன் நிலையில் இருந்த நேரத்தில், செலான் டிகிரி, வங்கியின் பொக்கிஷமாகத் திகழும் வாடிக்கையாளர்களான குழந்தைகள் மீது, தொடர்ந்து கவனம் செலுத்தியது.

இலங்கையில் இந்தக் காலகட்டத்தில், டிஜிட்டல் முறையில் முன்னணியில் செயற்பட்ட வங்கித் தயாரிப்புகளில், செலான் டிகிரியும் ஒன்றாகும். மேலும், 'டிகிரி ஒன்லைன்

**முழு நாடும் லொக்டவுன் நிலையில் இருந்தபோது, செலான் டிகிரி, வாடிக்கையாளர்களான குழந்தைகள் மீது, தொடர்ந்து கவனம் செலுத்தியது**


**சந்தையில் முன்னணி சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் ஒன்றாக, செலான் டிகிரி அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் குழந்தைகளுக்குப் புதுமையான மற்றும் மகிழ்ச்சிகரமான சலுகைகளை வழங்கி வருகிறது**

புத்தாண்டு விழா', 'டிகிரி ஸ்டோரி டெல்லர்', 'டிகிரி ஸ்டே ஹோம் டயரி', 'டிகிரி சாம்ப்' மற்றும் 'டிகிரி வெசாக் வாழ்த்து' போன்ற டிஜிட்டல் செயற்பாடுகள் மூலம், தனது இளம் வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து ஈடுபாட்டைப் பேணிய ஒரே சிறுவர் சேமிப்புக் கணக்காக அமைந்துள்ளது.

புத்தாண்டு வாழ்த்துகள், சிறந்த ஆடை, உண்டியலில் உள்ள பணத்தை ஊகித்தல் மற்றும் ஒரு புதுமையான புத்தாண்டு இளவரசனுக்கும் இளவரசிக்குமான அலங்கார அணிவகுப்பு ஆகியவற்றைக் கொண்ட டிகிரி ஒன்லைன் புத்தாண்டு விழாவில், நாடெங்கிலும் உள்ள 25,000க்கும் மேலான குழந்தைகள் நேரடியாகப் பங்கேற்றனர். மேலும் இது, ஒரு மில்லியனுக்கும் அதிகமான சமூக ஊடகப் பயனர்களைச் சென்றடைந்திருந்தது.

# மொபிடெல் முதல் 5G Mixed Reality

## நேரடித் தொலைக்காட்சி நிகழ்ச்சி




Mobitel, 5G தொழில்நுட்பத்தின் உருமாற்றம் பெறும் திறனைக் காண்பிக்கும் வகையில், தெற்காசியாவின் முதலாவது Mixed Reality நேரடித் தொலைக்காட்சி நிகழ்ச்சியை 5G வலையமைப்பின் மூலம் SLT Peo TV - சரண தொலைக்காட்சி அலைவரிசையுடன் இணைந்து வழங்கியது.

5G தொழில்நுட்பத்துடன் நேரடி தொலைக்காட்சி ஒளிபரப்பின் போது, இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் (TRCSL) பணிப்பாளர் நாயகமான ஓஷத சேனாநாயக்க மற்றும் SLT மற்றும் Mobitelஇன் தலைவர் ரொஹான் பெர்ணான்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சி காட்சிப்படுத்தப்படும் போது, இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRCSL) பணிப்பாளர் நாயகமான ஓஷத சேனாநாயக, அந்நேரடி நிகழ்வில் கலந்துகொண்டார். TRCSLஇல் தமது அலுவலக வளாகத்திலிருந்து மொபிடெலின் 5G வலையமைப்பின் மூலம் 'அசீம' நேர்காணல் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். 5G தொழில்நுட்பத்தின் மூலம், குறைந்தளவு தாமதத்துடன் அதிவேகமான திறன்கள் புவியியல் ரீதியாக பரவியிருக்கும் பங்கேற்பாளர்களை உண்மையான நேரத்தில் மெய்ந்நிகர் நிகழ்வுகளில்- virtual events இணைக்க அனுமதிப்பதன் மூலம், எல்லைகளை எவ்வாறு தடையற்றவையாக மாற்றிட முடியும் என்பதனை Mixed Reality தொழில்நுட்பத்துடனான இந்த ஒளிபரப்பு வெளிப்படுத்தியது.

# புதிய முகவரியில் பீப்பள்ஸ் லீசிங்

## கொழும்பு 07 வோர்ட் பிளேஸில் கிளை

பீப்பள்ஸ் லீசிங் கொழும்பு 7 - வோர்ட் பிளேஸ் கிளை, புதிய முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு துரித கதியில் நிதிச் சேவைகளைச் சௌகரியமாகப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில், இந்தக் கிளை புதிய முகவரிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. இல: 04, பப்டிஸ்ட் ஆலய வீதி, கொழும்பு 7 எனும் முகவரியில் அமைந்துள்ள இந்தக் கிளையை, பீப்பள்ஸ் லீசிங் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான சப்ரி இப்ரஹிம் திறந்து வைத்தார்.




**பீப்பள்ஸ் லீசிங் அறிமுகம் செய்திருந்த புத்தாக்கமான நிதித் தீர்வுகள் காரணமாகவும் அதிகளவு வாடிக்கையாளர்கள் எமது கிளையை நாடியிருந்தனர். பல புதிய வாடிக்கையாளர்கள் இந்த புதிய தீர்வுகள் மீது நாட்டம் காண்பித்திருந்தனர்**

இந்த நிகழ்வில், பீப்பள்ஸ் லீசிங் நிறுவனத்தின் சஞ்ஜீவ பண்டாரநாயக்க, லயனல் பெர்ணான்டோ (சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர்கள்), ரொஹான் தென்னகோன், லக்சந்த குணவர்தன, பிரபாத் குணசேன (பிரதி பொது முகாமையாளர்கள்), ஹசந்த டீ சில்வா (பிரதம முகாமையாளர்), சுமுது பெர்ணான்டோ (கிளை முகாமையாளர் - கொழும்பு 7) மற்றும் பெருமளவான பீப்பள்ஸ் லீசிங் வாடிக்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், பீப்பள்ஸ் லீசிங் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான சப்ரி இப்ரஹிம் கருத்துத் தெரிவிக்கையில், "அண்மைக் காலத்தில், கொழும்பு 07ஐ அண்மித்துப் பல புதிய வியாபாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பீப்பள்ஸ் லீசிங் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, எமது வோர்ட் பிளேஸ் கிளையில் நெரிசலான நிலையை அவதானிக்க முடிந்தது. பீப்பள்ஸ் லீசிங் அறிமுகம் செய்திருந்த புத்தாக்கமான நிதித் தீர்வுகள் காரணமாகவும் அதிகளவு வாடிக்கையாளர்கள் எமது கிளையை நாடியிருந்தனர். பல புதிய வாடிக்கையாளர்கள் இந்த புதிய தீர்வுகள் மீது நாட்டம் காண்பித்திருந்தனர்" என்றார்.

மக்கள் வங்கி

# கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் கைகோர்ப்பு

மக்கள் வங்கி நாட்டின் நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (MSMEs) அபிவிருத்திக்காக திட்டம் ஒன்றினை முன்னெடுப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் (IDB) கைகோர்த்துள்ளது.

இந்தக் கைகோர்ப்பு பற்றி அறிவிக்கும் சிறப்பு நிகழ்வினை சமீபத்தில் மக்கள் வங்கி தமது பணியாளர் பயிற்சிக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தது.

ஒப்பந்தத்திற்கு அமைய மக்கள் வங்கி மற்றும் IDB உடன் இணைந்து சுமார் 5000 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆதரவுடனும் முறையான நிதி வசதிகளுடனும் தங்கள் வணிகங்களின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்திட முடிவு செய்துள்ளன. ஏற்றுமதி, இறக்குமதி மாற்றீடு, உள்நாட்டு மதிப்பு கூட்டல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் போன்றவற்றுக்கு இத்தொழிற்துறைகளை மிகுந்த திறன்களுடன் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

செலான் வங்கியின்

# கட்டண தளம் அறிமுகம்

சிலாபம் புனித மரியாள் கல்லூரியில் VOBA(மெய்நிகர் பழைய மாணவர் சங்கம்) என்ற கட்டண நுழைவாயில் வசதியை செலான் வங்கி அறிமுகப்படுத்தியது. டிஜிட்டல் மயமாக்கலுக்கான அதன் செயல்பாட்டின் ஒரு பகுதியாக இவ் மெய்நிகர் தளம் வழங்கப்பட்ட முதலாவது பாடசாலை இதுவாகும்.

பழைய மாணவர்கள் அவர்களின் முன்னாள் சகாக்களுடன் இணைவதற்கும், பள்ளியின் தற்போதைய மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்காணிப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு பல்நோக்கு வலையமைப்பாக இத்தளம் அமைந்துள்ளது. பழைய மாணவர் சங்க (OBA)

**அண்ட்ரொய்ட் (Android) மற்றும் iOS சாதனங்களில் இணையத்தளம் மற்றும் மொபைல் வழியாக இவ்வலையமைப்பை தற்போது அணுகலாம்**

உறுப்பினர் கட்டணத்தை செலுத்தவும், உலகம் முழுவதும் இருந்து பள்ளியின் வங்கி கணக்கிற்கு நேரடி நன்கொடைகளை வழங்கவும், செலான் வங்கி, சங்க உறுப்பினர்களுக்கு இத்தளம் மூலம் வசதி பெற்றுக்கொடுத்துள்ளது. அண்ட்ரொய்ட் (Android) மற்றும் iOS சாதனங்களில் இணையத்தளம் மற்றும் மொபைல் வழியாக இவ்வலையமைப்பை தற்போது அணுகலாம்.

# புதிய முகவரியில் SDB வங்கியின் கந்தளாய்க் கிளை



SDB வங்கி, தனது கந்தளாய்க் கிளையை, அண்மையில் புதிய முகவரிக்கு இடம்மாற்றியுள்ளது. வாடிக்கையாளர்ளுக்கு சிறந்த நட்பு ரீதியான சேவையை அதிநவீன வசதிகளுடன் வழங்கும் முகமாக, கந்தளாய்க் கிளையானது, இல. 94, பிரதான வீதி, கந்தளாய் எனும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

SDB வங்கியானது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் அனுமதி பெற்ற, நாடளாவிய ரீதியில் 94 கிளைகளைக் கொண்ட விசேட வங்கியாகும்.

A.W.S.லலித் குமார சமரசிங்க அவர்கள் இந்தக் கிளையின் பொறுப்பதிகாரியாக செயற்படுவதுடன், இக் கிளையானது கடந்த 10 வருட காலமாக இப் பிரதேச மக்களுக்கு தனது சேவைகளை வழங்கி வருகின்றது.

விடாமுயற்சியுடன் விரும்பியதைச் செய்யுங்கள்

# ‘வெற்றி நிச்சயம்’

## கஸ்தூரி செல்லராஜா வில்சன் - பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி - ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி



ச.சேகர்

பஇலங்கையின் குழுமக் கம்பனிகள் வரலாற்றில், முதன் முறையாகத் தமிழ் பேசும் பெண் நிறைவேற்று அதிகாரியாக, கஸ்தூரி செல்லராஜா வில்சன் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையின் பொதுப்பட்டியலிடப்பட்ட வியாபாரக் குழுமங்களின் வரலாற்றை மாற்றி எழுதிய இந்த நியமனம், குழுமக் கம்பனியில் நிறைவேற்று அதிகாரி எனும் பொறுப்பில் இதுவரை காலமும் நிலவிய வழமையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாற்றம் என்பதே மாறாதது என்பதற்கு மற்றுமொரு சான்றாக, குழுமக் கம்பனியின் நிறைவேற்று அதிகாரிப் பொறுப்பு என்பது, ஆண்களுக்குரியதாகவே இதுவரை காலமும் பார்க்கப்பட்டது. ஒக்டோபர் 1ஆம் திகதி முதல் இந்தப் பொறுப்பை இவர் ஏற்கவுள்ளதுடன், அதற்கு முன்னோடியாக, ஜூலை 1ஆம் திகதி முதல் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயலாற்றி வருகின்றார்.

கஸ்தூரி செல்லராஜா வில்சன், தனது வாழ்க்கைப் பயணம், அனுபவம், திட்டங்கள், எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கும் அறிவுரை எனப் பல விடயங்களை, தமிழ்மிரர் வாணிபப் பகுதியுடன் நேர்காணலின் போது பகர்ந்துகொண்டார். அந்த நேர்காணலின் விவரம் கீழே,

**கே:** இலங்கையின் நிறுவனக் குழுமமொன்றின் முதல் பெண் பிரதம நிறைவேற்று அதிகாரியாக எவ்வாறு நீங்கள் உணர்கின்றீர்கள்? குறிப்பாக, நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் என முக்கிய அரசியல் பிரமுகர்கள் அடங்கலாக, பலர் உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர், உங்களுக்கு இது எதை உணர்த்துகின்றது?

உண்மையில், முதல் பெண் நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமை என்பது, எவ்வித மாற்றத்தையும் என்னுள் உணர்த்தவில்லை. கடந்த 18 வருடங்களாக, நான் ஹேமாஸ் நிறுவனத்தில் பணியாற்றுகின்றேன். நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதமானவர்கள் பெண்கள், எனவே, அவர்களையும் நிர்வாகக் கட்டமைப்பில் இணைத்துக்கொள்ளும் ஒரு கலாசார முறை தோற்றம் பெறுவது வரவேற்கத்தக்கது. எனது நியமனத்துக்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர். அனைவருக்கும் நன்றி.

**கே:** உங்கள் தொழில் வாழ்க்கையின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிடலாமா,

> **காகிதாதிகள் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனமான அட்லஸ், சுகாதாரத் துறைக்கு ரோபோ இயந்திரமொன்றை வடிவமைப்புச் செய்து, கொவிட் 19 தொற்றொழிப்புக்கு ஒழிப்புக்கு பங்களிப்புச் செய்திருந்தது**

அதாவது தொழிலில் பிரவேசித்த முதல் நாள் அனுபவம், இன்றைய நிலைக்கு உயர்வடைவீர்கள் என்று, அன்று நீங்கள் சற்றேனும் சிந்தித்தீர்களா?

எனது தொழில் வாழ்க்கையை நான் ஒரு கணக்கு மீளாய்வு நிறுவனத்தில் ஆரம்பித்தேன். உண்மையில் நான், நீண்டகால இலட்சியம் என்று எதனையும் கொண்டிருக்கவில்லை. நான் ஏதேனும் முயற்சியில் ஈடுபட்டால், அதில் வெற்றியீட்ட வேண்டும் என்பது எனது குறிக்கோளாக அமைந்திருக்கும். அந்த விடமுயற்சியுடனான பயணமே, இன்றைய நிலைக்கு உயர்வித்திட்டது.

**கே:** ஹேமாஸ் நிறுவனத்துடன் நீங்கள் இணைந்துகொண்டது, நிறுவனத்தில் நீங்கள் பயின்ற விடயங்கள், தொடர்ந்து நீங்கள் தொழிலில் நிலைத்திருப்பதற்கு ஏதேனும் விசேட காரணிகள் உள்ளனவா?

ஹேமாஸ் நிறுவனத்தில் நான், பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் இணைந்துகொண்டேன். இங்கு எனக்கு பல விடயங்களைப் பயில முடிந்தது. இதற்கு முன்னதாக, நான் மூன்று நிறுவனங்களில் பணியாற்றியிருந்தேன். ஆனாலும், தொழில் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டமாக ஹேமாஸ் நிறுவனத்தில் இணைந்துப் பணியாற்றும் காலப்பகுதியைக் குறிப்பிடலாம். என்னைப் பொறுத்தமட்டில், நான் விரும்பும் செயற்பாட்டை மேற்கொள்ள முடிகின்றது. விடாமுயற்சி எனது நிலைத்திருப்புக்குப் பக்கபலமாக அமைந்துள்ளது.

**கே:** தொழில் வாழ்க்கையில், இதுவரை காலத்திலும் நீங்கள் சாதித்தவை என எந்த விடயத்தை அல்லது விடயங்களைக் கருதுகின்றீர்கள்? அதற்கு உங்களுக்குப் பக்கபலமாக அமைந்திருந்த நபர்கள், விடயங்கள், காரணிகள் என எதையும் நினைவுகூர விரும்புகின்றீர்களா?

இன்றைய நிலைக்கு உயர்வடைவதில் எனது பெற்றோர்கள் எனக்குப் பெரிதும் பக்கபலமாக அமைந்திருந்தனர். அதேபோன்று, தொழிலிலும் விளையாட்டுத் துறையிலும் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக, அதில் எய்திய வெற்றிகளுக்கு நண்பர்களிடமிருந்தும் பெருமளவு பாராட்டுதல்களும் ஊக்குவிப்புகளும் குவிந்திருந்தன. எனது சுயமுயற்சியுடன், இவர்களின் பக்கபலமும் என்னை முன்நோக்கி நகர்த்தப் பெரும் உந்து சக்தியாக அமைந்திருந்தன.

**கே:** உங்கள் பிரத்தியேக வாழ்க்கையில், நீங்கள் சவால்கள் நிறைந்த காலப்பகுதிகளைக் கடந்து வந்துள்ளீர்கள் எனக் கேள்வியுற்றேன். தமிழ் பேசும் பெண்ணாக, ஒற்றைத் தாயாக நீங்கள் இன்றைய நிலைக்கு உயர உங்களை ஊக்குவித்த விடயங்கள் யாவை?

எனது வாழ்க்கை முறை, தமிழ் பேசும் கலாசாரத்தைப் பின்பற்றியதாக அமைந்திருந்த போதிலும், பெற்றோர் எனக்கு மிகவும் பக்கபலமாக இருந்தனர். குடும்பத்தில் நான் கடைசிப்பிள்ளை. என்னைப் பெற்றோர், ஆண்பிள்ளையைப் போன்று பார்த்தனர். சிறு வயதில், என்னை அச்சமின்றி ஒடுக்கி வைக்காமல், என்னைச் சுதந்திரமாகச் செயலாற்ற அனுமதித்தனர்.

தமிழ்ப் பேசும் எம்மக்களின் கலாசாரம் என்பது, பெண்களின் முன்னேற்றத்துக்கு ஒரு தடங்கலாக இருந்த போதிலும், சமூகத்திலிருந்தும் உற்றார்களிடமிருந்தும் என்னை விட எனது பெற்றோர் அதிகளவு சங்கடகரமான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்திருந்தனர். ஆனாலும், அவர்களின் ஊக்குவிப்பு மற்றும் பக்கபலம் இன்றும் தொடர்ந்த வண்ணமுள்ளது. ஒரு தமிழ்பேசும் பெண் என்பதைவிட, நான் உண்மையில் ஒரு இலங்கைப் பெண் என்பதை மனதில் கொண்டே எனது செயற்பாடுகளைத் தொடர்கின்றேன்.

**கே:** நாட்டில் மூன்று தசாப்த காலமாக யுத்தம் நிலவியது, அதன் வடுக்கள் மற்றும் தாக்கங்கள் இன்றும் எம்மால் தமிழ் பேசும் சமூகத்தில் உணரக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, கணவனை இழந்த பல பெண்கள், ஒற்றைத் தாயாகத் தனித்துச் சமூகத்தில் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு நீங்கள் ஒரு பெண்ணாகத் தெரிவிக்கும் அறிவுரை யாது?

நாட்டில் யுத்தம் நிலவியமை என்பது, ஒரு கவலைக்குரிய விடயம். தமிழ் பேசும் சமூகங்களில் மாத்திரமன்றி, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைக் காணமுடிகின்றது. இவர்களுக்கு எனது பங்களிப்புடன், எம் நிறுவனத்தால் தொழில் முயற்சிகளை முன்னெடுப்பதற்கான பல அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் போன்றன வழங்கப்படுகின்றன.

அதுபோன்று, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், அங்கவீனமுற்றவர்கள் எனப் பலரும் எமது சமூகத்தில் காணப்படுகின்றனர். இவர்களுக்கு உதவும் வகையில், எமது பங்களிப்புடன் அயடி (Ayati) நம்பிக்கை நிதியத்தினூடாக நாம் உதவிகளை வழங்கி வருகின்றோம்.

பாதிக்கப்பட்டவர்கள் மீண்டெழ முயற்சிக்கின்றனர். இலங்கையர்கள் எனும் வகையில், நாம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும், கைகொடுத்து உதவும் பண்பைக் கொண்டவர்கள். இந்தப் பண்பு உண்மையில் உன்னதமானது.

**கே:** புதிய பொறுப்பில் நீங்கள் நிறைவேற்ற அல்லது முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ள விசேட திட்டங்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா? உலகளாவிய ரீதியில் கொவிட்-19 எனும் தொற்றுப் பரவல்

> **நாட்டில் 52 சதவீதமானவர்கள் பெண்கள். எனவே, நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு என்பது இன்றியமையாதது. காலம் மாறிய வண்ணமுள்ளது. மேலேத்தேய கலாசாரம் எம்முள் ஊடுருவியுள்ளது**

காரணமாக, மனித குலம் ஒரு சவாலான நிலைக்கு முகங்கொடுத்துள்ளது. உலகப் பொருளாதார வளர்ச்சி என்பது ஸ்தம்பித்துள்ளது. இலங்கையிலும் இதன் தாக்கத்தை உணர முடிகின்றது. உங்கள் நிறுவனத்தின் வியாபாரச் செயற்பாடுகளுக்கு இதன் பாதிப்பு எவ்வாறு அமைந்துள்ளது? அதைச் சீர்செய்ய அல்லது மீட்டெடுக்க நீங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளீர்கள்?

கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தொடர்ந்து, எமது வியாபாரச் செயற்பாடுகள் மாத்திரமன்றி, நாட்டின் ஒட்டுமொத்த வியாபாரங்களுக்கும் ஏதேனும் ஒரு வகையில் பின்னடைவு அல்லது பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனாலும், தற்போதைய நிலைமை படிப்படியாக வழமைக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளது. தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு நிலை பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில், எமது குழுமத்தின் மூன்று வியாபாரப் பிரிவுகள் சிறப்பாகச் செயலாற்றியிருந்தன.

குறிப்பாக, காகிதாதிகள் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனமான அட்லஸ், சுகாதாரத் துறைக்கு ரோபோ இயந்திரமொன்றை வடிவமைப்புச் செய்து பங்களிப்புச் செய்திருந்தது. ஹோட்டல் துறையைச் சேர்ந்த நீர்கொழும்பின் க்ளப் டொல்பின் ஹோட்டலை, தனிமைப்படுத்தும் நிலையமாகப் பயன்படுத்த அனுமதியளித்திருந்தது.

அதுபோன்று, ஊரடங்குக் காலப்பகுதியில், நாட்டில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமலிருப்பதற்காக எமது மருந்துப்பொருள்கள் பிரிவு தொடர்ந்தும் கடுமையாக செயலாற்றியிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக நாட்டின் இயக்கநிலைக்கு ஹேமாஸ் குழுமம் தனது பங்களிப்பை வழங்கிய வண்ணமுள்ளது.

**கே:** இன்று பதின்ம வயதிலிருக்கும் ஒரு பெண் பிள்ளைக்கு, பாடசாலைப் பருவத்திலிருக்கும் ஒரு பெண் பிள்ளைக்கு, அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு நீங்கள் எவ்வாறான அறிவுரைகளை வழங்குவீர்கள்? உங்களைப் போல அவர்களும் ஒரு நாள் உயர்ந்த நிலைக்குவர, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றீர்கள்?

முதலில் ஒழுக்கமான நற்பண்புகள் நிறைந்த ஒரு மனிதராக வாழப்பழகுங்கள். புத்தகக் கல்வி மட்டுமே உலகமல்ல. பல்துறைகளில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். கனவுகளைக் கொண்டிருங்கள், ஆனாலும், அந்தக் கனவுகளுக்கு உங்களை மட்டுப்படுத்திவிடாதீர்கள். கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிடாதீர்கள். புதிய விடயங்களை மேற்கொள்ள ஆர்வமாக இருங்கள். விடாமுயற்சியுடன் விரும்பியதைச் செய்யுங்கள் வெற்றி நிச்சயம். எதிர்பார்ப்புகளைக் கைவிட்டுவிடாதீர்கள். உங்களால் கண்டிப்பாக முன்னேறமுடியும்.

**கே:** நிறுவனமொன்றின் நிர்வாகச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு எந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என நீங்கள் கருதுகின்றீர்கள்? பெண்களின் பலம் மற்றும் பலவீனம் எதுவென உங்களால் குறிப்பிட முடியுமா? தமது பலத்தை மேம்படுத்தி, பலவீனத்தை இல்லாமல் செய்யக்கூடிய ஏதேனும் வழிமுறைகள் என உங்களால் எதனையும் குறிப்பிட முடியுமா?

நாட்டில் 52 சதவீதமானவர்கள் பெண்கள். எனவே, நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு என்பது இன்றியமையாதது. காலம் மாறிய வண்ணமுள்ளது. மேலேத்தேய கலாசாரம் எம்முள் ஊடுருவியுள்ளது. குறிப்பாக, நகர்ப் பகுதிகளில் எம்மால் இதனை அவதானிக்க முடிகின்றது. இன்று பெண்கள் பலர் நிறுவனங்களில் தொழில்களில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

விடாமுயற்சியுடன் வெற்றியை இலக்காகக் கொண்டுச் செயலாற்றினால், தமது இலக்குகளை எய்தக்கூடியதாக இருக்கும். ஏட்டுக்கல்வியால் மாத்திரம் இந்த நிலைக்கு உயர்ந்துவிட முடியாது. விளையாட்டு போன்ற பல துறைகளில் நாட்டம் காணப்பட வேண்டும். அதனூடாக, எமக்கு முன்னேற்றத்துக்கு வேண்டிய ஆளுமைகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**கே:** ஹேமாஸ் குழுமம் அல்லது வியாபாரம், கடந்த ஆண்டில் இன ரீதியாக வெறுப்பூட்டும் செயற்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தது. குறிப்பாக, நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து, ஒரு சில விஷமிகளால் குறித்த இனத்தைச் சேர்ந்தவர்களின் வியாபாரங்களைத் தவிர்க்கும்படி சமூக வலைத்தளங்களில் பிரசாரங்கள் பரப்பப்பட்டிருந்தன. இவ்வாறான சூழ்நிலை எதிர்காலத்திலும் எழக்கூடும், குறிப்பாக, உங்களின் நிர்வாகக் காலப்பகுதியில் இது போன்றதொரு நிலை எழுந்தால், அதற்கு முகங்கொடுத்து, உங்கள் நிறுவனத்தின் வியாபார செயற்பாடுகளை பாதுகாப்பதற்கு ஏதேனும் விசேட திட்டங்களைக் கொண்டுள்ளீர்களா?

எமது குழுமத்தில், மொத்தமாக 6,000க்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்கள், இலங்கையில் வசிக்கும் சகல இனத்தையும் சேர்ந்தவர்கள். எமது நிறுவனம், நீண்ட வரலாற்றைக் கொண்டது. வியாபாரச் செயற்பாடுகளுக்கு மட்டுப்படுத்திக் கொள்ளாமல், இன, மத பாகுபாடின்றி பின்தங்கிய பிரதேச மக்களின் முன்னேற்றத்துக்குத் தமது பங்களிப்புகளை வழங்கி வருகின்றது.

குறிப்பாக, முன்பள்ளிகளை நிறுவி, அவற்றினூடாக எதிர்காலச் சந்ததியினருக்கு அவசியமான ஆரம்பக் கல்வி அறிவைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. இவை, எமது வியாபாரச் செயற்பாடுகளுக்கு அப்பால் நாம் சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

> **விடாமுயற்சியுடன் வெற்றியை இலக்காகக் கொண்டு செயலாற்றினால் தமது இலக்குகளை எய்தக்கூடியதாக இருக்கும். ஏட்டுக்கல்வியால் மாத்திரம் இந்த நிலைக்கு உயர்ந்துவிட முடியாது**

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமானவை. அதனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையர் எனும் வகையில் நாம் கடந்த காலங்களில் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்திருந்தோம். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், சமூகப் பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில் நாம் எம்மாலான பங்களிப்புகளை வழங்கியிருந்தோம்.

ஒரு சிலர் தமது குறுகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்தாலும், நாட்டு மக்களுக்கு எம்மைப் பற்றித் தெரியும். இலங்கையருக்காக, இலங்கை நிறுவனம் எனும் வகையில் ஹேமாஸ் தனது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும்.

(படங்கள்; குஷான்பதிராஜ)





# ‘ஆணும் பெண்ணும் நிகர் எனக் கொள்வோம்’

திருமண வாழ்வில் பெண்கள் அதிருப்தியடைவதற்குப் பிரதான காரணமே, அவர்களுக்குரிய கௌரவம் கிடைப்பதில்லை என்ற இடத்தில்தான்.

மனித கௌரவம், அடிப்படை உரிமைகளில் பிரதானமானது. மனிதர்கள் யாவரும், உள்ளார்ந்த கௌரவத்தையும் சமமான, பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கிகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையானது. நமது குடும்ப அமைப்பு முறை, அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானதாகவும் பெரும்பாலும் ஆண் மய்ய சிந்தனைகளின் ஆதிக்கத்தினாலுமே கட்டமைக்கப்பட்டுள்ளன.

பெண் கௌரவம் குறித்த அசிரத்தையும் அவமதித்தலும், ஆண்களிடத்தே சாதாரணமாகவே மேலோங்கியிருக்கின்றன. பெண்களை அவமானப்படுத்தக்கூடிய காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு இடமளிக்கத்தக்கதாக ஒரு குடும்ப அமைப்பு இருக்குமெனில், பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்கான சுதந்திரங்கள் பெண்ணுக்கு அமைவதென்பது, அத்தனை எளிதானதில்லை.

பெண்கள் தங்களுக்கு நேரும் அவமானங்களுக்கு எதிராக, எந்தவித எதிர்வினைகளும் ஆற்றமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றார்கள். குடும்ப கௌரவம் கருதி, கடைசி வரையிலும் மௌனமாகவே வாழ்வோடு கரைந்துபோகின்ற பெண்களாகவே வாழ்கிறார்கள். மிகச் சில பெண்கள் இத்தகைய சிறையிலிருந்து உடைத்துக் கொண்டு வெளியேற எண்ணினாலும், கல்வியின்மையும் பொருளாதாரக் காரணிகளும் கட்டிப்போடுகின்றன.

பெண் கல்வியின் அவசியத்தைக் கூர்ந்துநோக்க வேண்டிய இடம் இதுதான். கற்ற பெண்கள் சுய தெளிவு கொண்ட பெண்களால் நீண்ட காலத்துக்குக் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. விதை, நிலத்தை முட்டிக்கொண்டு துளிர்ப்பதைப் போல அவர்கள் தடைகளை உடைப்பார்கள். தொழில் இல்லை, வருமானம் இல்லை என்ற தயக்கங்கள் அவர்களை இறுக்கிப் பிடிக்காது. படிப்பு இருந்தால், எப்படியும் தொழில் வாய்ப்பைப் பெற்றுவிடலாம் என்ற உறுதியான நம்பிக்கையோடு இருப்பார்கள்.

**பெண், கல்வியின் அவசியத்தைக் கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது. கற்ற பெண்கள் சுயதெளிவு கொண்ட பெண்களால் நீண்ட காலத்துக்குக் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது**

**பெண்கள், தங்களுக்கு நேரும் அவமானங்களுக்கு எதிராக எந்தவித எதிர்வினைகளும் ஆற்றமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றார்கள்**

**எப்போது பெண் தன்னைச் சுற்றி நடக்கின்ற அநிதிகளை இனங்காணவும் எழுந்து நிற்கவும் உணர்கிறாளோ, அப்போதுதான் அவள் சுதந்திரம் பெறுகிறாள்**


வீடுகளில் நடக்கின்ற வன்முறைகளைச் சகித்துக்கொண்டு வாழ்கின்ற பெண்களில் 80 சதவீதமானவர்கள், பொருளாதார பலமற்ற காரணத்தினாலேயே அவற்றைச் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்களிடமே தங்களை முழுமையாக ஒப்படைத்து, அவர்களிடமே தங்கியிருக்கும் இவர்களால், நாளையைத் திட்டமிடுவதற்கான எந்த அடிப்படைகளும் இல்லை என்ற தாழ்வுச் சிக்கல் இருக்கின்றது. கணவனின் வன்முறைகளை எதிர்த்து நின்றால், அவன் தன்னை முழுமையாகப் புறக்கணித்துவிடும் பட்சத்தில், வாழ்க்கைக்கு என்ன வழியென்று யோசிப்பதைப் போல ஒரு கொடுமை இருக்க முடியுமா என்ன?

எப்போது பெண் இரவில் தனியாக நடக்கத்தக்க சூழல் உருவாகிறதோ, அதுதான் நிஜமான சுதந்திரம் என்று மகாத்மா காந்தி ஓர் இடத்தில் சொல்லியிருப்பார். ஆனால், எப்போது பெண் தன்னைச் சுற்றி நடக்கின்ற அநீதிகளை இனங்காணவும் எழுந்து நிற்கவும் உணர்கிறாளோ, அப்போதுதான் அவள் சுதந்திரம் பெறுகிறாள்.

கணவன் விரும்பினால், பிள்ளை பெற்றுக்கொள்வது, விரும்பாதபோது கருத்தடை செய்துகொள்வதிலிருந்து தனது உடல், மனம் சார்ந்த அனைத்துத் தெரிவுகளையும் ஆணிடமே ஒப்படைத்த ஒரு பெண், என்ன விதமான கௌரவத்தை ஓர் ஆணிடமிருந்து அல்லது குடும்ப அமைப்பிடமிருந்து எதிர்பார்க்க முடியும்? தனது உடலை எப்படிப் பயன்படுத்துவது, எதற்காகப் பயன்படுத்துவது என்பதைக்கூட ஒரு பெண்ணால் தீர்மானிக்க முடியாதென்றால், அவள் கௌரவமாக வாழ்கிறாள் என்று எதைக்கொண்டு கணிப்பிடுவது?

வீடு, கார் போன்ற ஆடம்பர அடையாளங்கள்தான் கௌரவம் என்று எண்ணி, தங்கள் உடலையும் வாழ்வையும் முழுமையாகக் கணவனிடம் ஒப்படைத்துவிட்டுத் தனக்காக இல்லாமல் ஊருக்காக வாழ்கின்ற பெண்கள் ஒரு நிலைக்கு மேல் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

இந்த எல்லாவிதமான முரண்பாடுகளுக்குமே அடிப்படைக் காரணியாக இருப்பது கல்விதான். மற்றையது, பால் நிலை சமத்துவம் பற்றிய அறிவின்மை. எமது பெண்களுக்கும் ஆண்களுக்கும் கல்வி மட்டுமல்ல, பால் நிலைச் சமத்துவம் பற்றிய அறிவும் அவசியப்படுகின்றது. ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டாலே அறிவிலோங்கி, இவ்வையம் தழைக்கும்.



# அவளுக்கு ஒரு வாக்கு

இலங்கை சனத்தொகையில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் பெண்களாக இருந்தாலும் அவர்களின் அரசியல் வகிபங்கு மிகக்குறைவாகவே உள்ளது. இந்நிலையில், அதிகாரமட்டத்தில் பெண்களின் வகிபங்கு அதிகரிக்க வேண்டியது காலத்தின் தேவை.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில், இதனை மாற்றமுடியும் என்ற நம்பிக்கையோடு பல பெண்கள் களமிறங்கிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நமது சமூக அமைப்பில் பெண்கள் அரசியலுக்கு வருவதென்பது அத்தனை எளிதானதோ, சாதாரணமானதோ இல்லை. பல்வேறு விமர்சனங்களையும் சமூக நெருக்கடிளையும், புறக்கணிப்புகளையும் சந்தித்தபடியே பெண்கள் அரசியல் களத்தில் தங்களை ஈடுபடுத்துகிறார்கள்.

அரசியலுக்கு வரும் பெண்களுக்கு, பொதுச் சமூகம் அளிக்கும் பட்டங்களுக்கும் விமர்சனங்களுக்கும் நல்ல பதிலடி கொடுப்பதற்கான சரியான காலத்தில் இருக்கிறோம். நம் பிரதேசத்தில், தேர்தல் களத்தில் வேட்பாளர்களாக இருக்கும் பெண்களை இனங்கண்டு, அவர்களுக்கு ஒரு வாக்கை அளித்து ஜனநாயக அரசியலில் முதற்படியை எடுத்து வைப்போம்.




புதுவாசல் – 11

# இரகசிய மனிதர்களின் வீடு

ஸர்மிளா ஸெய்யித்
sharmilaseyyid@yahoo.com



“3-Iron” ஒரு கொரிய திரைப்படம். 2004இல் வெளியான திரைப்படம். சமீபத்திய விமானப் பயணத்தின்போது, நேரத்தைக் கடத்துவதற்காக இந்தத் திரைப்படத்தைப் பார்த்தேன். ஒரு தனித்துவமான பாணி; தலைசிறந்த படைப்பாக, அதற்கேயான சொந்த விசித்திரமான பிரகாசத்துடன் என்னை உள்ளிழுத்துக் கொண்டது.

வீடு பற்றிய அற்புதமான கதை. ஒவ்வொரு வீட்டுக்கும் அவற்றின் சொந்த அர்த்தங்கள் உள்ளன. சில வீடுகளில், உறக்கம் வருவதில்லை. சில வீடுகளில் நீண்ட நாள்கள் தங்கியிருக்கப் பிடிப்பதில்லை. சில வீடுகளை விட்டுக் கிளம்பிச்செல்ல விரும்புவதில்லை. சில வீடுகள் இராசியானதென்று நம்ப வைக்கக்கூடியன. இதனாற்தான், வீட்டை அகம் என்கிறோம். ஒரு மனிதனின் அந்தரங்கமும் அகமே! அதனுள் நுழைந்துபார்த்தால், நாம் என்னவெல்லாம் பார்க்க முடியுமோ, அதை அவனுடைய வீட்டிலும் பார்க்க முடியும்!

உயிர் இருக்கும் உடலைத்தான் மனிதர் என்று குறிப்பிடுகிறோம். அதுபோலவே, மனிதர்கள் வாழ்ந்தால்தான் அது வீடு. இல்லாவிட்டால் அது வெறும் கட்டடம். வீடு என்பது, பேரின்பத்தை, அமைதியைத் தருகிற இடம் என்பதால், அப்படி ஒரு கற்பனை உலகை மதங்கள் சிருஷ்டிக்கின்றன. உழைப்பையும் களைப்பையும் நீக்கி ஆசுவாசப்படுத்திக் கொள்ளக்கூடிய இடங்கள் ஆயிரம் இருந்தாலும், அவை எல்லாம் வீடு போல் வராது.

வீடுகளில் வாசல் இருக்கிறது. ஆனால் வாழும் மனிதர்களால் வெளியேற முடிகிறதா? வீடுகளில் ஜன்னல்கள் உள்ளன. காற்று நுழைகிறதா?

வீடுகளில் கழிப்பறை இருக்கிறது. மனிதர்கள் மலச்சிக்கலால் அவதிப்படுகிறார்கள். வீடுகளில் சமையலறை இருக்கிறது. மனிதர்களுக்குப் பசியெடுப்பதில்லை. வீடுகளில் பூசையறை இருக்கிறது. தெய்வங்களைக் காண்கிறோமா?

அதனால்தானோ என்னவோ, வீடும் உறவும் இல்லாத “3-Iron” திரைக்கதை நாயகன் டாய் சு மகிழ்ச்சியாக இருக்கிறான். விடுதலைச் சுதந்திரத்தை அனுபவிக்கிறான். நகரில் உள்ள எல்லா வீடுகளையும், தன் வீடுபோலவே எண்ணுகிறான். காலையில் எல்லா வீடுகளின் கதவுகளிலும் ஒரு விளம்பரத் துண்டு பிரசுரத்தை டாய் - சு ஒட்டுகிறான். மாலை எந்த வீட்டின் கதவில் அந்தத் துண்டு பிரசுரம் கிழிக்கப்படாமல் இருக்கிறதோ, அந்த வீட்டைத் திறந்து உள்ளே செல்கிறான்.

நடப்பது யதார்த்தமா, புனைவா, நனவா, கனவா, உண்மையா, மாயமா?

இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் கிம் கி டக், தயாரிப்பாளர், இயக்குநர், எழுத்தாளர் என்று பல தளங்களில் இயங்கும் ஓர் ஆளுமை. “3 அயர்ன்” திரைக்கதை அவரது இன்னொரு மேஜிக் என்று சிலாகித்து எழுதப்பட்டிருந்ததை இணையங்களில் கவனித்தேன். அந்தச் சிலாகிப்பில் எந்த மிகைப்படுத்தலும் இல்லை என்பதை, படத்தைப் பார்த்துப் புரிந்துகொள்ள முடியும். டாய் சு, இரவில் நுழையும் வீடுகளில், கணவனும் மனைவியும் பெரும்பாலும் காதலோடு வாழ்வதில்லை. இது அவர்களது வொய்ஸ் மெஸேஜில் தெரிகிறது. ஆனால் டாய் சு , வீட்டுச் சொந்தக்காரர்களை விடவும், அந்த வீடுகளை முழுமையாக இரசிக்கிறான். அனுபவிக்கிறான். தன்னுடைய துணிமணிகளை துவைக்கிறான். முடிந்தால் வீட்டுக்காரர்களின் துணியையும் துவைத்துப் போடுகிறான். குளியலறையில் குளிக்கிறான். பிடித்ததைச் சமைத்துச் சாப்பிடுகிறான். வீடுகளில் பழுதடைந்திருக்கும் வெய்ட் மெஷின், ஸ்பீக்கர், போன்ற பொருள்களின் பழுதை நீக்கி வைக்கிறான். சுவரில் மாட்டியிருக்கும் வீட்டு உறுப்பினர்களுடைய படங்கள் முன்னால் நின்று செல்ஃபி எடுத்துக்கொள்கிறான்.

இப்படி, ஒரு வீட்டில் யாருமில்லை என்று நுழைகிறான். அவன் சாப்பிடுவதை, துவைப்பதை, பழுதுபார்ப்பதை அந்த வீட்டில் இருக்கும் பெண் ஆச்சரியமாக, இரகசியமாகக் கவனிக்கிறாள். அவள்தான் அந்த வீட்டுக்காரனின் மனைவி சுன் ஹூ. அவனது சுதந்திரமான போக்கு, அவளைக் கவர்ந்துவிடுகிறது. ஒரு கட்டத்தில், வீடு காலியாக இல்லை; வீட்டுக்காரி இருக்கிறாள் என்பதை டாய் சுவும் கவனித்து வெளியேறுகிறான். முன்னதாக தொலைபேசி வழியாக அவளுடைய கணவன், அவளை டார்ச்சர் செய்வதை அறிகிறான். ஆகவே, அவளை அப்படியே விட்டுப்போக மனமில்லாமல் மீண்டும் வருகிறான். அப்போது, வீட்டுக்கு வந்த கணவன், அவளிடம் வல்லுறவில் ஈடுபட, அவனைத் தாக்கி அவளைக் காப்பாற்றுகிறான். கணவனிடமிருந்து தப்பித்த சுன் ஹூ, டாய் சுவுடன் வெளியேறுகிறாள்.

இருவரும் ஆள் இல்லாத வீடுகளில் தங்குகிறார்கள். காதலிக்கிறார்கள். இப்படி நுழையுமொரு வீட்டில், பிள்ளைகளின் அன்பு கிடைக்காத தந்தை ஒருவன் நோயால் இறந்துகிடக்கிறான். இருவரும் அவரை எடுத்து அடக்கம் செய்துவிட்டு அங்கேயே தங்குகிறார்கள். அப்போது, வீட்டுக்கு வரும் மகன், பொலிஸை அழைக்கிறான்.

பொலிஸார், சுன் ஹூவை மீண்டும் கணவனிடம் ஒப்படைத்து, டாய் சூவை சிறைக்கு அனுப்புகிறார்கள். அங்கு டாய் சூ, மனிதர்கள் கண்களிலிலிருந்து மறைந்து வாழும் (invisible man) வித்தையைக் கற்கிறான். முன்பு அவன் தங்கியிருந்த சில வீடுகளில், அவனைத் தாக்கிய மனிதர்களை பழிவாங்குகிறான்.

இறுதியாக, தனக்காகக் காத்திருக்கும் சுன் ஹூ வீட்டுக்கு வருகிறான். சுன் ஹூவை அவள் கணவன் அணைக்கிறான். கணவனுக்குப் பின்னால் நிற்கும் டாய் சூ , சுன் ஹூவுக்கு முத்தமிடுகிறான். தன்னோடு சுன் ஹூ அன்பாக வாழப் பழகிவிட்டதாக அவள் கணவன் நம்புகிறான். உண்மையில் அவள் கண்ணுக்குத் தெரியாத டாய் சூவுடன் வாழ்கிறாள்.

இந்த வாழ்வு, உண்மையும் கனவுமாக இருக்கிறது என்கிற வாசகத்துடன் திரைக்கதையை முடிக்கிறார் இயக்குநர் கிம் கி டக். வீடுகளில் எப்போதும் கண்ணுக்குத் தெரியாத மனிதர்கள் வாழ்ந்தபடிதான் இருக்கிறார்கள். மகன், மகள், அப்பா, அம்மா இப்படி எல்லோருடைய அறையிலும் ஒரு இரகசிய மனிதர் ஒளிந்திருக்கக் கூடும். மனிதர்களின் பாதி வாழ்வுதான் புறத்தே தெரிகிறது. பாதி, கனவாக இருக்கிறது என்கிறார் கிம் கி டக். பல பெண்களும் ஆண்களும், உண்மையான மகிழ்ச்சியுடன் காதலுடன் இங்கு இல்லை. பலர், உறவில் நேர்மையில்லை. ஆனாலும் வாழ்கிறார்கள். இந்த வாழ்வுக்கு, ஒவ்வொருவருக்கும் ஏதோவொரு நியாயமும் காரணமும் இருக்கலாம். அந்தப் போலித்தன்மையை, யாரும் வெளிப்படுத்துவதில்லை. யாரும் ஏற்றுக் கொள்வதுமில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 18 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.